# இளைஞர் மகா நாடு.

## அக்கிராசனப் பிரசங்கம்.

(முன் தொடர்ச்சி.)

நண்பர்களே!

இராஜீய தேசிய சம்பந்தமாய் நான் ஒன்றும் சொலலாமல் வந்திருக்கிறேன். அது சம்பந்தமாய் பல தரப்பட்ட அபிப்பிராயம் சரியாயிருக்குமாவென்று அனுமானிக்கிறேன்: இது விஷயமாய்ப் பேசப்புகுந்தால் எத்தனையோ பேர்கள் பேசியவைகளைத்தான் பேச வேண்டியிருக்கும். ஆனதுபற்றி விரிவாக நான் ஒன்றும் சொல்லாமல் மிகச் சுருக்கிக் கூறுகிறேன்.

ஜனங்களுடைய குறைகளை நேரில் வந்து தெரிந்து உடனே அதற்குப் பரிகாரம் செய்துவைக்கும் முற்கால அரசர்களைப்போல் இப்போதுள்ள அரசருக்கு இடமில்லை. அவர் வெகு தூரத்திலிருந்து கொண்டு வான சாஸ்திரிகளைப்போல் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாய் நம்மைப்பார்க்கிறார். நம்முடைய வியகாரங்களும் முற்காலங்களைப் போல் யாதொரு செலவுமின்றி ஒரு பஞ்சாயத்தாரிடம் தீர்த்துக்கொள்ளுமுறைகளின்றி தற்போது ஒரு விவகாரம் முடிய பத்து வருஷங்களுக்கு மேலும் ஆகி விடுகிறது. நம்முடைய வாழ்க்கையும் அதோடு முடிந்து விடுகிறது. இதைப்பற்றிக் குறை கூறிச் செய்யும் கலக்கமானது வனத்தில் கூவின கூச்சல் போன்றிருக்கிறது. இந்தியாவின் விடுதலையானது அது அடைந்திருக்கும் முற்போக்கின் நிலைமையைக் கருதும்போது இராஜாங்கக் கழனியால் தேடிப் பெறக் கூடியதல்ல வென்று அதிகாரத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் ஆட்சிகளை யெல்லாம் அந்நியர் தப்பாக நினைத்துக் கோபங்கொள்ளக் கூடியதாயிருக்கிறது. ஞாயமாய் சுய ஆட்சியை விரும்பினாலும் சதிகாரர்களோவென்று சந்தேகிக்கப்படுகிறது. கேள்வி முறையின்றி தலைவர்கள் காராக்கிரகத்தில் அடைக்கப்படுகிறார்கள். நாம் கற்பதற்கு காசில்லையென்று கையை விரித்து விட்டு 68 கோடி ரூபாய் ராணுவங்களுக்குச் செலவிடப்படுகிறது. நாட்டில் வக்கீல்களதிகரிக்க வாக்குச் சம்பிரதாயங்கள் மேலிட்டுவருகின்றன. சட்டங்களுக்கெல்லாம் அர்த்த பேதங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவர்களுடைய ஆளுகையே மிகுதியாகின்றது. தற்போதிய இராஜீயப் பிரசினை முள்ளுகள் அடர்ந்த பிரதேசமாய்க்காணப்படுகின்றது. நமது தேசியக் கொள்கைகளும் பலவிதமாயிருக்கின்றன. சூரத் காங்கிரஸுக்குப் பிறகு எத்தனையோ கட்சிகளேற்பட்டு எவ்வளவோ கொள்கைகள் மாறிவிட்டன. பலவழிகளிற் சென்று கொண்டிருந்த ஜனங்களைக் குதிரைக்கு முகப்பட்டா கட்டிவிட்டதுபோல் மகாத்மா காந்தி ஒரே வழிக்குக் கொண்டுவந்து சேர்த்தார். சுயராஜ்யக் கோபுரம் வெகு சமீபத்திற் காணப்பட்டது. தூரத்திலுள்ளவர்களும் (ஒன்றுமறியாதவர்களும்) கூட கோபுரத் (காந்தி இயக்கத்) தைக் கையெடுத்துக் கும்பிட்டு நின்றார்கள். இடையில் முட்டுக் கட்டைக் கக்ஷி யொன்றேற்படவே அவ்விராஜ்யம் (வெகு தூரம் விலகிவிட்டது. முட்டுக் கட்டை யென்பது பொது வார்த்தை; அது போட்டவரையும் போட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே போட்டுக் கொண்டதுபோலிருக்கிறதேயன்றி அரசாங்கத்தை ஒரு விரற்கடையாவது அசைத்து விடவில்லை. ஆனால் ஆரம்பத்தில் கொஞ்சம் குழப்பமடைந்து கொண்டிருந்த பர்கென்கெட்ரீடிங் பிரபுக்கள் போன்ற அதிகாரிகளுடைய மனது தியாக மூர்த்தி சித்தரஞ்சனதாஸ் காலஞ் சென்ற பொழுதே பயம் நீங்கிவிட்டது. இனி நம்முடைய வேட்டை சாயாதென்று கண்ட முட்டுக் கட்டைக் கக்ஷியாரும் கோட்டைக்குள் நுழைந்து எந்த ஆசனம் காலியாயிருக்கிறது; எதில் குந்தலாமென்று அதிகாரிகள் முகவாய்க் கட்டையைப்பிடித்து மெதுவாய்அதிகாரத்தில் ஏறி வருகிறார்கள். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணென்பதை நம்மாகாணத்திலும் கண்கூடு ஆகக் காணலாம்.

நாடார்களாகிய நாம் கட்டுப்பாடாய் ஒரு கட்சியிலும் சேர்ந்து கொள்ளவில்லை. மற்றவர்களைப் போலவே நாமும் அவரவர் கொள்கைக் கேற்ப ஒவ்வொரு கட்சியையும் தனிப்பட்ட ஹோதாவில் ஆதரித்து வருகிறோம். எந்த சமூகமும் கட்டுப்பாடுடன் ஒரு கட்சியையும் ஆதரித்து விடவில்லை. நாமும் அப்படியே. நாடார் மஹாஜன சங்கமும் நாம் தனிமையில் ஒரு கட்சியை ஆதரிக்கும்போது தடை செய்ய மாட்டாது. தேசத்தில் திறமையும், ஜனாபிமானமும் பூரணமாகவுள்ள ஒரு கட்சி இது தானென்றேற்படும்வரையும் எந்த சமூகமும் கட்டுப்பாடுடன் ஒன்றில் இலேசில் இறங்கிவிட மாட்டாது. நாம் தேசக் கடமையிலும் மற்றவர்களுக்குப் பின் தங்கிவிடவில்லை. நம்மை தேசத்தோடொத்துழைக்கிறார்களில்லை யென்று நம்மைக் குறை கூறுகிறவர்கள் நம்மை நன்றாய் அறிந்து கொள்ளவில்லை யென்றே நினைக்கிறேன்.

தேசியக் கட்சித் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார் 12—9—25-ல் நன்னிலம் தாலுகா சன்னா நல்லூருக்குச் சென்றிருக்கும்போது அங்குள்ள நாடார்கள் அவரை மரியாதையுடன் வரவேற்புச்செய்தபோது பின்வருமாறு பதில் சொல்லியிருக்கிறார்.

**நாடார் சமூகத்தினர் ராஜாங்கத் துறையில் தங்களுக்குரியபொறுப்பை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் முன்வந்து தங்களுக்குரிய ஸ்தானத்தை வகிப்பின் அவர்களுக்குள்ள அசௌகரியங்களெல்லாம் தொலைந்துபோகும் என்பதே.**

இவர் அவர்கள் பத்திரத்தில் என்ன படித்திருக்கிறார்களென்று பார்த்தே பதில் சொல்லவில்லை. இவருடைய வேலையைப் புகழ்ந்து பாராட்டி வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்கள். இவ்வாக அவர்களுக்குள்ள குறையை நிவர்த்திக்க விண்ணப்பம் செய்வதாக நினைத்துப் பதில் சொல்லியிருக்கிறார். ராஜாங்கத் துறையில் பொறுப்பை இன்னும் ஏற்றுக் கொள்ள வில்லை என்று இவர் எப்படி அறிந்தார்? எப்போதறிந்தார்? தஞ்சை ஜில்லா நாடார்களுக்கு என்ன அசௌகரியமிருக்கிறது? என்பனவிளங்கவில்லை. பொதுவான ஒரு விஷயத்தை நினைத்து இவர் அங்ஙனம் சொல்லியிருப்பாரேல் இவர் ஒரு காங்கிரஸ் தலைவரும், மகாத்மாவின் சீடருமாயிருந்தும் மகாத்மா திருநெல்வேலியில் அழுத்தமாக நாடார்களைப் பற்றி "ஒவ்வொரு தென்னிந்திய காங்கிரஸ் சபையும் நாடார்களுக்குள்ள குறைகளைக் கவனிக்க வேண்டும். அது சித்தியடையாவிடின் தலைவர்கள் காங்கிரஸ் உத்தியோகங்களை ராஜிநாமா செய்துவிட வேண்டும். அப்படி ராஜிநாமா செய்துவிடுவதால் தென்னிந்தியாவில் காங்கிரஸ் நின்றுவிடுவதானாலும் பாதகமில்லை" என்று சொல்லியிருந்ததைக் கவனித்தாரா? ஸ்ரீமான் ஐயங்கார் இதுவரையும் அதைப்பற்றி என்ன செய்திருக்கிறார்? 1920-ல் திருநெல்வேலியில் கூடிய சென்னை மாகாண மகாநாட்டில் இவர் தலைமை வகித்துப் பேசியபோது அது சம்பந்தமாய் ஒரு வார்த்தையாவது சொன்னாரா? தற்போது தக்ஷிணமெங்குஞ் சுற்றி எத்தனையோ பொது ஜனக் கூட்டங்களில் பேசி வருகிறார். ஒரிடத்திலேனும் அதைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறாரா? மகாத்மாவைப் பின்பற்றுகிறவர்கள் அவர் சொன்னபடி செய்திருக்க வேண்டுமன்றோ? மகாத்மா நம்மை இவர்களோடு ஒத்துழைக்கும்படி ஒருபோதும் சொல்ல வில்லை. ஸ்ரீமான் ஐயங்காரும் நாடார் நான்காவது மகாநாட்டில் தலைமை வகித்திருந்து பேசியபோது இப்படி உபதேசம் செய்தது கிடையாது. அப்போதவர் அட்வோகேட் ஜெனராலாகவிருந்தார். இதனால் அவரவர் கொண்ட நோய்க்கு மருந்து குடிக்கிறார்களென்று கூறுகிறேனே யொழிய ஸ்ரீமான் ஐயங்காரைக் குறை கூறவில்லை. ஆனால் நாம் எந்தக் கட்சிகளையும் ஆதரிக்கலாம். ஆனால் உள்ளொன்றும், உதட்டிலொன்றுமாகப்பேசும் மனிதர்களை நம்பிவிடக் கூடாது. இதனால் உண்மையுள்ளவர்களில்லை யென்று சொல்வதாக எண்ணிவிடக் கூடாது. தேசம் தற்போதுள்ள சிக்கலான வழியை விட்டு முற்போக்கடையச் செய்யு முயற்சியில் நமதிளைஞர்கள் பூரணமாய்ப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். தேசக் கடமையை விருதாவாய்க் கழித்து விடக் கூடாது. நமது தாய்ச் சங்கம் தீர்மானித்துள்ள தீர்மானங்களை நீங்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும். அதுவே நமக்கு நன்மையையும், தேசத்துக்கு நன்மையையும் உண்டாக்கும். அப்போது மகாத்மாவின் பேரபிமானத்தை மாத்திரமல்ல, ஈஸ்வரனுடைய ஆசீர்வாதத்தையும் பெறுவீர்கள்; தேசாபிமானிகளுமாவீர்கள். அதாவது, நாடார் மஹாஜன சங்கம் பத்தாவது கான்பரன்ஸில் நம்மவர்கள் வீட்டுத் தொழிலாக நடத்தி வந்து விடுபட்டுப்போன ராட்டினங்களை மறுபடியும் அனுஷ்டிக்க வேண்டுமென்றும், அந்நூலைக் கொண்டு நெய்த ஆடைகளையே அணிய வேண்டுமென்றும், சுதேசக் கைத் தொழில்களை ஆதரித்துக் கூடுமானவரையும் அந்நிய சாமான்களுக்குப் பதிலாக சுதேச சாமான்களை உபயோகிக்க வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறது. நாடார் மஹாஜன சங்கத்தை நீங்கள் உண்மையில் ஆதரிக்கிறவர்களானால் மேலே சொல்லியவைகளைக் கூடுமானவரையும் நீங்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும். நூல் நூற்பதினாலுள்ள நன்மைகளை மகாத்மா வெகு விரிவாய்ச் சொல்லியிருப்பதை நீங்களறிவீர்கள். அது புதுத் தொழிலல்ல; பூர்வீகத் தொழிலே. தென்னாட்டில் நமது பெண்கள் இன்னும் அநேகர் நூற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனது சுற்றுப் பிரயாணத்தில் அநேக ராட்டினங்கள் சுற்றுவதைப் பார்த்திருக்கிறேன். திருநெல்வேலி ஜில்லா ஆவரைக்குளம் என்னும் சிறு கிராமத்தில் எனது நண்பர் வீட்டில் ஒரு கிழவி தோட்டத்திலிருந்து பருத்தி பிடுங்கி எடுத்துக் கொண்டு வந்ததும் அதை ஒரு சிறுமி மணையில் வைத்து பஞ்சாக்கினாள். மறுபடியும் அக்கிழவி பஞ்சைப் பக்குவம் செய்து ராட்டினத்தைச் சுற்றி நூல் நூற்றனள். அவ்வம்மையார் இரவெல்லாம் நூற்றுக் கொண்டிருந்தனள். தினசரி கால் ரூபாய் கூலி கிடைக்குமென்று சொல்லினள். அச்சிறுமியேன் நூற்றிருக்கக் கூடாதென யோசிக்குங்கால், கூடங்குளத்தில் ஸ்ரீமான் பொன்னுச்சாமி நாடார் நமது வீட்டு தொழிலாகிய ராட்டினங்களை நமது சிறு பெண்கள் அது கிழவி தொழிலென்று அலட்சியமாய் நினைக்கவே அத்தொழிலும் கிழமாகி பலங் குறைந்து விட்டதெனப் பேசியது ஞாபகத்திற்கு வந்தது. ஆகையால் நமது பெண்களை ஓய்வு நேரங்களிலாவது நூற்கும்படி செய்வதில் என்ன கெடுதி இருக்கிறது? நூற்பதனால் மனச் சாந்தி ஏற்படுகிறதென்று சொல்லப்படுகிறது. ஆனால் எனக்கதில் அனுபோகங் கிடையாது. இளைஞர்களே இதைச் செய்து காட்ட வல்லார்கள். கதர் கட்டும் கட்டாயத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகை நழுவ விட்டு விட்டது. நாம் அதைக் கட்டாயமாய்க் கட்டுவதினால் குற்றமொன்றுமில்லை. நாட்டிலே நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை யென்ற இவ்வையக வாக்கியத்தை மான்ச்செஸ்ட்டருக்கு நமது நாடு விலையாக விற்றுவிட்டது. நமது நாட்டு நூலைக் கொண்டு நெய்த ஆடைகளைச் சுமக்க முடியவில்லை யென்று சொல்லப்படுகிறது. அரை யாடையைச் சுமக்க முடியாதவர்களா சுயராஜ்ய மடையப் போகிறீர்களென்று பாட்னாவில் மௌலானா முகம்மதலி எச்சரிக்கை செய்துளார். இவ்வுலகத்துக்கெல்லாமே நமது நாடு நல்ல துணிகளைக் கொடுத்து மானத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது. எவ்வளவோ மெல்லிய ஆடைகளை நமது நாட்டார் நெய்து வந்திருக்கிறார்கள். இயந்திரங்களெனும் பெரும் பூதங்களுடன் போட்டி போட முடியாமலே அத்தொழில் நசித்து விட்டதாகக் காண்கிறதேயன்றி நம் நாட்டில் நல்ல தொழில்களில்லாமற் போகவில்லை. சுமார் ஓராயிர வருடங்களுக்கு முன்னிருந்த நமது கம்பநாடன் நெசவுத் தொழிலின் நுட்பத்தை ஓரிடத்தில் சிறப்பித்திருக்கிறார். ஜனக ராஜன் அழைப்பிற் கிணங்கி தசரதன் தம்முடைய நால்வகை சேனைகளுடனும், பந்து மித்திரர்களுடனும் அயோத்தியை விட்டுப் புறப்பட்டுச் செல்லுங் காலத்தில், பெண்கள் எவ்வித ஆடைகளணிந்து சென்றார்களென்று சொல்லப்பட்டிருக்கிறதென்பதைக் கவனியுங்கள்.

நூட்சிலம்பி யலர்ந்தன நுண்டுகில்
கட்சிலம்பு கருங் குழலார் குழு
உட்சிலம்பு சிலம்பவொதுங்கலால்
புட்சிலம்பிடு பொய்கையும் போன்
(றதே:—

முதலாவது நூட்சிலம்பி யலர்ந்தன நுண்டுகிலென்றார். அதாவது, நுண்மையான சிலம்பிப்பூச்சிகளால் செய்யப்பட்ட நூற்களிருக்கிறதே அதுபோன்ற (நுண்டுகில்) நுண்மையான ஆடைகளை பெண்களணிந்திருந்தார்களென்று இதனால் விளங்குகிறது. அதன் மேன்மைகளை நன்குணர்ந்து தான் மகாத்மா அதையே மதமாகக் கொண்டிருக்கிறார். உலகெல்லாம் அம் மதம் சம்மதம், சம்மதம் என்று சாற்றுகிறது. நாடார்களாகிய நாமும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நமக்குக் கட்டிக் கொள்ள துணி வேண்டாமென்றால் அம் மதமும் வேண்டாமென்று சொல்லிவிடுங்கள். இதற்கு நாம் பயப்படத் தேவையில்லை. கதரையே நாம் கட்டுவோமானால் ஏழைகளைக் காப்பாற்றிய தருமம் நமக்குத் திட்டமாய்க் கிடைக்கும். இவ்விரண்டுந்தான் மகாத்மாவின் பிரதானமானதும், பிரியமானதுமான வேலையாகும். ஒரு மகாப் பெரியவருக்குப் பிரியமான வேலையை நாமும் பிரியமாய்ச் செய்வதில் பின்வாங்கக் கூடாது. சுயராஜ்யத் தலைவர்களுக்குத் தேர்தல் திருவிழாக்களைச் சிறப்பாய் நடத்தும் வேலையைக் கொடுத்துவிட்டு ஜனங்களுக்கு இவ்விரு வேலைகளைக் கொடுக்க மகாத்மா முன் வந்துவிட்டார். மனிதர் மானத்தையும், உயிரையும் காப்பாற்றுவது ஊணும், உடையுமென்பதை நீங்களெல்லோரும் அறிந்திருக்கலாம். ஊணும், உடையும் தனக்கு வேண்டியதெனத் தானே சம்பாதிக்க முடியாமல் அந்நியரை எதிர்பார்த்திருக்க முடியுமா? எல்லாவற்றிற்கும் அந்நியரை எதிர்பார்த்தே நம் நாடு வறுமை நோய் கொண்டிருக்கிறதென்பதை நீங்கள் அனுதாபத்துடன் நோக்குதல் வேண்டும். தற்போது எவை எப்படி யிருந்தபோதிலும் சரி ஜன நாயக உணர்ச்சியும், பாரமார்த்திக சக்தியும் தேசத்தில் வேகமாய்த் தோன்றிவருகின்றன. ஒரு புதிய வேகம் எங்கும் பரவி வருகிறது. ஊக்கமும், பலமும், சுதந்திர வுணர்ச்சியும் ஒவ்வொருவருக்கும் சொந்தமாகி விட்டன. அக்குணங்களை இனியாரிடத்திலும் எவரேனும் பெற வேண்டியதில்லையென்று தெரிகிறது. தேசாபிமானவுணர்ச்சி நாடெங்கும் தோன்றிவிட்டது. தியாகத்துக்கு ஜனங்கள் அஞ்சுவதில்லை. சும்மா தூங்கிக் கொண்டிருந்தவர்கள் கூட உற்சாக புருஷர்களாய்க் காணப்படுகிறார்கள். ஓடுகிறவர்களுக் கிடையில் நாம் ஊர்ந்து சென்று கொண்டிருந்தால் நாம் நசுக்கப்பட்டுப் போவோம். மேலே செல்லுகிறவர்களைக் கண்டு நாம் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டு சும்மாவிருப்போமானால் நாமவர்களுக்கு ஏணியாகத் தானிருக்கமுடியும். வெறும் பேச்சிலும், வீண் பேச்சிலும் திருப்தியடைந்து வந்த காலம் மலையேறிவிட்டது. இனி நாம் செய்ய வேண்டியது வேலையே. வாக்கு சம்பிரதாயத்துடன் கேள்விக் கின்பமாக வெகு நேரம் பேசிக்கொண்டிருக்கலாம். அதோடு நின்று விட்டால் பலனுண்டோ? வீரத்தோடும், உறுதியோடும் வேலை செய்யக் கூடிய காலமே நம் முன் வந்து நிற்கிறது. அவ்வேலைத் தெய்வத்திற்கு வேண்டியது படைக்காவிட்டால் நம்மையே விழுங்கிவிடக் கூடும்! நமது வாழ்விலே ராஜீயம், தேசீயம், ஜாதீயம் இம் மூன்றும் நித்திய கடமையாக இருக்கின்றன. இனி நாம் அக் காரியங்களிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து நமது ஜனங்களுக்குள் இடைவிடாத கிளர்ச்சி செய்து ஊக்கமாய் நடைபெறச் செய்ய வேண்டியதிருக்கிறது. இவ்வளவும் எவ்வளவு சீக்கிரத்தில் நடக்க வேண்டுமென்பதை இளைஞர்கள் உணர வேண்டும். யுத்தத்திற்கு முந்தி இல்லாத புத்தியும், காணாத காட்சியும், கேட்காத வீர வார்த்தையும் இப்போது தேச மெங்கும் பரவி இருக்கின்றனவென்பதும், உண்மையில் பழைய பேச்சும், தந்திரங்களும் மிகப் பழமையாய்த் தள்ளப்பட்டன வென்பதும், வைதீக அசட்டு வாதங்களெல்லாம் கசப்பாய் விட்டன வென்பதும் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் இவ்வளவு சீக்கிரத்தில் இவர்களுடைய சகல பலமும் விர்த்தியடைந்து விட்டதா வென்று பிறர் ஆச்சரியப்படததக்க வேலைகள் செய்ய உங்களுக்குச் சௌகரியமும், யுக்தியும் இருக்கின்றன. அவற்றைத் தட்டி எழுப்ப வேண்டும். ஒரு குடும்பத்தில் எத்த

(இதன் தொடர்பு 7-ம்பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பொழுது போக்கு.

இந்திய தேசம் ஓர் இரத்தினக்களம். புகுந்தோர்களெல்லாம் வாரிக்கொண்டு போயினர். இப்போது பல்லாண்டுகளாக ஆங்கிலேயர் கையிலகப்பட்டிருக்கிறது. நாட்டைக் கைப்பற்றி நன்கு செழிக்கின்றார்கள். நாட்டுக் குரியவரில் எண்ணிறந்தோர் வயிற்றிற்கின்றி விழிக்கின்றார்கள். சமரசம் நிலவுவதெஞ்ஞான்றோ!

* *

இந்தியா தனது பண்டைப் பெருமை ஒளி மங்கி பரிதபிப்பதின்றும் நீக்கம் பெற தலைவர்கள் சொற்படி இந்திய மக்கள் ஆக்கம் கொள்ளின் காரிய சித்தி சீக்கிரம் கைகூடும்.

* *

உலக நாடக மேடையில் அடிமைத்தன மலைப் பாம்பு அம்மையாம் பாரத தேவியை (இந்தியாவை) விழுங்கி விடாவண்ணம் அரும்புதல்வர்களாம் மகாத்மா போன்ற தலைவர்கள் விவேகமெனும் தடி கொண்டடிப்பது ஓர் அரிய காக்ஷியாகும்.

* *

என்ன கதரியக்கம்; என்ன காந்தி; என்ன சுயராஜ்யம்; எல்லாம் வெள்ளை மயக்தான் எனச் சிலர் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்களுக்கு தேசீய மணம் நுகரக் கூடாதவாறு செய்யும் அஞ்ஞான நாசி யடைப்பு நீங்கினால் தெளிவுறுவார்கள்.

* *

கதர் அணிய வேண்டியது தான்; உத்தமச் செய்கைதான்; உயர்ந்த கொள்கைதான்; ஆனால் அந்நிய நாட்டுத் துணிக்குக் கொடுப்பதைப் பார்க்கிலும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறதே யென்றால், ஆமாம்; தற்போது விலை சிறிது அதிகம்தான்; நானா விர்த்தில் கதர் விர்த்தியாக ஆக விலை மிகக் குறைவுபடும்; இப்போது விலை யதிகமாயிருப்பினு மென்ன? அதற்கிடும் பணங் கொண்டு நம் மக்கள் தானே உய்கின்றார்கள் என்பது போன்ற சமாதானமே தரும்.

* *

மேடை மீதேறி பல விஷயங்களைப் பற்றி பிரசங்கமாரி பொழிந்துவிட்டு, அதைவிட்டுக் கீழிறங்கிய பின்னர் பேசிய பேச்சுகளுக்கு மாறாகச் செய்கிறவர்களிடம் பேச்சுக்கும் காரியத்திற்கும் மாறுபாடாயிருக்கிறதே யெனச் சுட்டிக் கேட்டால் வெறும் வாயை மெல்லுகிறார்கள்.

* *

மிஸ். மேயோ சிவலிங்கத்தை ஆண் குறிக்கும், விஷ்ணு பாத சின்னமாகிய ராமத்தைப் பெண் குறிக்கும் உவமை காட்டி யிருக்கிறாள். இவள் பெண்ணானையால் பெண் குறியை ராமம் போன்றிருக்கிற தெனச் சட்டெனக் கூறி யிருக்கலாம். ஆனால் இவள் (மிஸ்) கன்னியா ஸ்திரீயா யிருந்தும் ஆண் குறியை உவமைக் கெடுத்துக் கொண்டதுதான் ஆச்சரியமா யிருக்கிறது. இதிலிருந்து இவள் குணம் பிரதி பலித்துவிட்டது. பெண்ணே! பிரமாண்டமான இவ்வுலகத்தில் உவமைக்குப் பொருள்கள் நின் கண்ணுக்கு வேறு தென்படவில்லையா?

* *

அன்பு வழிதப்பி செல்வந்தர்களுக்கு சலுகை செய்வதிலும் படாடோபமாயிருத்தலிலும் சிலர் ஈடுபட்டுக் களிக்கின்றார்கள். உற்றுநோக்கின் ஒன்றுமில்லை பிரயோசனம் என்றுதான்கொள்ளலாம். இத்தகையார் தமக்குக் கீழ்ப் பட்டவரை எவ்வண்ணம் மதிக்கிறார்களோ அவ்வண்ணமே இவர்கள் மெச்சும் மேல்பட்டவர் தம்மை மதிப்பார்களென அறியார் போலும்.

* *

வருணாச்சிரம தருமம் வழுத்துவதென்ன? வேதம் ஓதுபவன் பிராமணன்; யுத்தம் செய்பவன் க்ஷத்திரியன்; வியாபாரம் செய்பவன் வைசியன்; மேற்படி மூவருக்கும் ஏவல் புரிபவன் சூத்திரன் என்பதே. ஆனால் இம்முறையிற் பிழைத்தவன் பிறப்பின்காரணமாய் அழைப்பதற்குரித்தவனல்லன். பிராமணன் தன் தொழில் தப்பி விட்டால் அவன் பிராமணல்லன். அப்படியே மற்ற மூவருக்கும். தொழிலில் ஒருவனைக் கட்டுப் படுத்துவதென்பதில்லை. சூத்திரனும் வேதமோதலாம்; ராஜரீகஞ் செய்யலாம்; வியாபாரஞ் செய்யலாம். அவரவர் மனப்பான்மையைப் பொறுத்ததே தொழிலும்.

---

## ஒன்றுகூடுங்கள்!
## ஒற்றுமைதேடுங்கள்!!

ஈீரார் கடலிலங்கையில் பேராய்விளங்கும் க்ஷத்திரிய நாடார்குல நவமணிகாள்! சின்னாட்களுக்கு முன் "நாடார் குல மித்திர"னதிபரவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் தருணம் அன்னார் முன்னில் கூடிய சில கூட்டங்களில், கூடியவிரைவில் இலங்கையில் நாடார்மகாநாடு ஒன்று கூட்டவேண்டுமென்றும் இப்போதே அதற்கு வேண்டிய முயற்சி எடுக்கவேண்டுமெனவும் சிங்கம்போல் வீரத்தொனி முழங்க கர்ச்சித்த வீர சிங்கங்காள்! டி மகாநாடு விஷயமாக நாளிதுவரை ஏதும் முயற்சி எடுத்திருப்பதாகத் தெரியவரவில்லையே. வாயால்ச் சொல்வது யார்க்கும் எளிது. செய்கையிலும் அதுபோலிருக்க வேணுமன்றோ? எற்கனவே இவ்விலங்கைத் தீவில் வடக்கன்குளம், கள்ளிக்குளம், காவல் கிணறு, அழகப்பபுரம் முதலிய ஊர்ச் சங்கத்தாரும், இலங்கை இந்திய க்ஷத்திரிய சங்கத்தாரும் ஒன்று சேர்ந்தால் நடவாமல்ப் போவதொன்றுளதோ?

ஆனால் இலங்கை இந்திய க்ஷத்திரிய சங்கத்தின் தற்காலநிலைமையையும் அதன் நிதியையும் "மித்திரன்" வாயிலாக சில கனவான்கள் எழுதிக்கேட்டும் அதன் நிர்வாகிகள் நாளிதுவரை யாதொரு பதிலும் கூறாது மௌனம் சாதிப்பது வருந்தத்தக்கதன்றோ? நிற்க, சென்ற 19-9-27-ல் வெளிவந்த நம் "மித்திர"னில் கொழும்பு நகரத்தில் "இலங்கை பாண்டியநாடார் சங்கம்" என ஓர் புதிய சங்கம் ஸ்தாபித்திருப்பதாகக் கண்ணுற்று ஆனந்த மடைந்தேன். டி புதிய சங்கத்தின் நோக்கமும் அதில் ஏற்படுத்தியிருக்கும் சட்டதிட்டங்களும் யாபேரும் ஒத்துக்கொள்ளத் தக்கதே. உத்தியோகம் ஏற்று நடத்த முன்வந்திருக்கும் அதன் நிர்வாகிகளும் எக்காரணத்தையிட்டும் பின்னடைய மாட்டார் களென்பது என்மனத்துணிபு. ஆனால்,

யான் விடுத்துள்ள வேண்டுகோள் என்னவெனில், தத்தம் ஜெனன நகரின் பெயரால் பல சங்கங்கள் இருப்பினும், நாடார் என்ற ஹோதாவில் மதபேதமின்றி யாபேரும் அங்கத்தினராய்ச் சேர்ந்து உழைக்கக் கூடிய பொதுஜன சங்கமொன்று வேண்டுமென்பதேயாகும். இது பல கனவான்களின் அவாவுமாகும். இக்குறையை நிவர்த்திக்கவே "இலங்கை பாண்டிய நாடார் சங்கம்" தோன்றியிருக்கிறது. பெரும்பாலும் இலங்கைவாழ் நாடார்கள் தக்க கல்வித்துறைகளிலும் தொழிற்றுறைகளிலும் வேலைசெய்து வருகின்றனர். எனவே இச்சிறு கட்டணத்தையும் சந்தாவையும் செலுத்தி அங்கத்தினராய்ப் பதிவுசெய்யப் பின்னடைய மாட்டார் களென்றெண்ணுகிறேன்.

இஃதைக் கண்ணுறும் கனவான்களே! யாருக்கு வந்த விருந்தோவென பராமுகமாயிருந்துவிடாமல் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேர்ந்து நம் புதிய சங்கத்தின் பொக்கிஷத்தை நிரப்பி எல்லோரும் ஒருமித்து கூடிய விரைவில் இலங்கையில் நாடார் மகாநாடும் ஒன்றுகூட்ட முன் வருவீர்களென உங்களை மிகவும் வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்; முயற்சி திருவினையாக்கும் என்னும் வாக்கியங்களை ஒவ்வொருவரின் மனத்திலும் ஊன்றிப் படிப்போமாக.

எல்லாம் வல்ல இறைவன்திருவருளால் நமது சமுகமும் அதன் சார்பாகவுள்ள சங்கங்களும் என்றுங் குன்றாத் தீபமாய் இவ்வுலகில் பிரகாசிக்க அவனடி தொழுகின்றேன்.

உப. சி. மா. ராயப்பநாடார்,

சிலோன்.

---

## கொழும்பு.

கள்ளிக்குளம் பால்யநாடார் சங்க 5-வது வருட 7-வது மாதாந்தக் கூட்டம் சென்ற 9-10-27ல் உணுப்பெட்டி 5-ம் திர் கட்டடத்தில் ஸ்ரீமான் வி. இ. மரியமிக்கேல்நாடார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் மிகத்திரளான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீமான்களான வி. ச. அந்தோனி சவரிமுத்து நாடாரவர்கள் 'நன்றிமறவேல்' என்பதைப் பற்றியும் கா. ஏ. தேவசகாய நாடாரவர்கள் 'கல்வி' என்பதைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அக்கிராசனர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்ததெனக் கௌரவ பொக்கிஷதார் ஸ்ரீமான் வி. மி. யேசுவடிய நாடார் எழுதுகிறார்.

---

## மரூஉ
## மொழிப் பிரயோகம்.

திருநெல்வேலிச் சைவசித்தாந்தக் கழகத்தினின்று வெளியாகும் "செந்தமிழ்ச் செல்வி" என்ற பத்திரிகையின் வைகாசி ஆனி மாசச் சஞ்சிகைகளில் ஸ்ரீமான். வெ. ப. சுப்பிரமணியமுதலியார், "சாணர்" என்ற மரூஉ மொழியை வெகு தாராளமாய்ப் பிரயோகித்திருக்கிறார். அவரெழுதிய வியாசத்தைப் படித்துப்பார்க்குமிடத்து, அவர் அப்பதத்தை வேண்டுமென்றே பிரயோகித்திருப்பதாகப் புலப்படுகின்றது. அவரைக் கல்விப்பட்டம் பெற்றவரென்றும் சைவசமயத்தினரென்றும் சிலர் சொல்லுகின்றனர். அவ்வியாசத்திலோ அன்னார்கூறும் இலக்கணங்களொன்றையும் காணோம். "இராமாயண உள்ளுறைப் பொருளும் தென்னிந்திய சாதிவரலாறும்" என்ற மகுடமிட்டு வியாசமெழுதப்புகுந்தவர், தாம் எடுத்துக்கொண்ட உள்ளுறைப் பொருளையேனும் சாதிவரலாற்றையேனும் உள்ளவாறுணராது, இலக்கண மொழியை எடுத்து ஆளவும் அறியாது, முற்கூறிய மரூஉ மொழியையே மீண்டும் மீண்டும் எடுத்தாண்டு ஏதேதோ குளறுகின்றார். தேசீய இயக்கம் மிக்கு நாமனைவோரும் சகோதரர் என்னுமுணர்ச்சி பரவி வருமிக்காலத்தில் யாம் அவ்வியாசத்திற்கு மறுப்பு முதலானவை எழுதப்புகுதல் அனுசிதமாமெனக் கொண்டு இரண்டொரு வார்த்தைமட்டில் சொல்லுவோம்.

முதலியார் தம்மைக் கல்விமான் என்று கொள்வரேல், கல்விமான்கள் எடுத்தாளும் சான்றார் என்னும் இலக்கண மொழியைத் தாமும் எடுத்தாளக்கடவர்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தினர் என்பது உலகறிந்த விஷயம். பெரிய புராணத்தில் சேக்கிழாரேனும், அதன் முதன் நூல்களில் மற்றையோரேனும் அவரை சாணர் எனக் கூறாது சான்றார் என்றே கூறியுள்ளார். ஆதலின், முதலியார் தம்மைச் சைவரென்று கொள்வரேல், இனியேனும் பெரிய புராணத்தைப் படித்துப் பார்த்து தமது மரூஉ மொழிப்பிரயோகத்தை நிறுத்தக்கடவர்.

தேசத்தில் சாதிச் சண்டைகளுக்கு இடம் வைக்காமல் சமாதானத்தை நிலைநாட்டுவது, கல்வியிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த எவருக்கும் கடமையாம். ஆதலின் முதலியார் தம்மை அத்தகையரென்று கொள்வரேல் தமது பிரயோகத்தை நிறுத்துவதுடன் முன்னர் பிரயோகித்திருக்கின்ற அம்மொழியை வாபஸ் வாங்குவதும் அவசியம். அன்றேல், அதனால் தேசத்தில் சச்சரவு விளைந்து முன்னேற்ற வியக்கம் தடைபடும். "இனிய வுளவாக வின்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

ஆ. மதனபாண்டியநாடார்,

சிவஞானபுரம்,

பாவூர்ச்சத்திரம் (போஸ்ட்)

---

## நாடார் பரிபாலன சங்கம்,
## விருதுநகர்.

விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்ற விஜய தசமி தினமாகிய 6—10—27 மாலை 7 மணிக்கு க்ஷத்திரிய வித்தியாசாலையில் ஸ்ரீமான் எம். பி. சுந்தரபாண்டிய நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நாடார் மக்களின் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அவ்வமயம் பலர் பல விஷயங்கள் குறித்துசொற்பெருக்கு நிகழ்த்தினர். ஆரம்பத்தில் ஸ்ரீமான் வே. வ. ராமசாமி நாடார் அவர்கள் நாடார் மக்களின் சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் காக்க நம்மிடையே தகுந்த பல சங்கங்கள் நிறுவ வேண்டிய அவசியத்தைப்பற்றி மிகவும் நன்றாகப் பேசினார். ஸ்ரீமான் கே. சம்பந்த நாடார் அவர்கள் "கும்பகோணம் மகாநாட்டின் விசேடம்" என்பதைப் பற்றிப் பேசும்பொழுது கதரின் அவசியத்தையும், நாடார்களைப்பற்றி அடிக்கடி துவேஷமான வியாசங்களை வெளியிடும் பத்திரிகைகளைப் பஹிஷ்கரிக்க வேண்டிய காரணங்களைப்பற்றியும், நம் சுப அசுப காரியங்களிலும், தேவாலயங்களிலும் நம் குலப் புரோகிதர்களை நியமிக்க வேண்டிய விஷயத்தைப்பற்றியும் இனிது பேசி முடித்தனர். ஸ்ரீமான் பி. தனுஷ்கோடி நாடார் அவர்கள் இந்து மதத்தின் பேரால் நடக்கும் புரட்டுகளையும், புரோகிதக் கொடுமைகளையும் எடுத்துக் காட்டி நாடார் மக்களை மேற்படி கொடுமையிலிருந்து விலகுமாறு வேண்டிக்கொண்டனர். பின்னர் அக்கிராசனர் அவர்கள்தன்முடிவுரையில் வாலிபர்களை நம் மக்கள் சுயமரியாதைக் குழைக்குமாறு உருக்கமாகத் தூண்டியதுடன், நம் குலச் சங்கங்கள் எப்பேர்ப்பட்ட துறைகளில் தம் கடன்களை ஆற்ற வேண்டுமென்பது பற்றியும் குறித்து கேட்போர் களிக்குமாறு ஓர் நீண்ட சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள்.

அதன் பின் "ஹிந்து"ப் பத்திரிகையில் திவான்பகதூர் இராமச்சந்திர ராவ் நாடார்களைப்பற்றி இழிவுரைகள் பகர்ந்திருப்பது பற்றிக் கண்டித்தும், இது விஷயமாய் நாடார் மகாஜன சங்கம் தாமதமின்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின் காரியதரிசி ஸ்ரீமான் பி. நடராச நாடார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

---

## இனிச்
## செய்யவேண்டிய தென்ன?

(வ. தி. சங்கரலிங்கம்)

நமது 11-வது மகாநாடு இன்புறுமாறு நடைபெற்று முடிந்தது. இதுவரையில் நடந்த மகாநாடுகளைக் காட்டிலும் இம்மகாநாடு பல விதத்திலும் சிறந்ததென்றே கூறவேண்டும். இதுவரையில் நடந்த மகாநாட்டில் தலைமை வகித்தவர்களெல்லாம் அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்களே. ஆனால் இந்த மகாநாட்டில் தலைமை வகித்தவர் சிறந்த அரசியல் வாதியாகவும் அகில இந்தியத்தலைவர்களில் ஒருவராயும் பொதுஜன ஊழியப்பிரியராயும் விளங்குபவர். நம் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களோ சுதந்திர மணமும் சுயமரியாதை மணமும் கமழுகின்றன. அத்துடன் சுயமரியாதையை அப்பிராமண பொதுஜனங்களுக்கு தெள்ளத்தெளிய உபதேசம் செய்த பெரியார் சுயமரியாதை வீரர் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் ஆங்கு விஜயம் செய்திருந்தது ஈண்டு குறிப்பிடத் தகுந்தது. சுயமரியாதை வீரர் நமக்கு ஆங்கு 1-30 மணிநேரம் உபதேசித்த சுயமரியாதைச் சொற்கள் நம் காதுகளில் இன்னும் சப்தித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வீரரை நம் நாட்டிற் கீந்த சர்வேஸ்வரரை நாம் என்றும் துதிசெய்வோமாக.

இதற்கு முன் நம் மகாநாடுகளில் செய்த தீர்மானங்களைக் காட்டிலும் இம் மகாநாட்டில் செய்த தீர்மானங்கள் விசேஷமானவைகள். அத்தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது நம் குலத்தவர்களைச் சார்ந்தது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் தீரவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு அற்பிசி மீ ௮ உ

---

## நாம் எதை நினைத்தழுவது!

எறும்பு முதல் யானை கடை எண்பத்து நான்கு லட்சம் ஜீவ வர்க்கங்களும் தத்தம் பிறப்புரிமையுடனும் சுயேச்சையுடனும் வாழ்க்கை நடத்துவதற்காக ஆண்டவனால் அருள் செய்யப்பெற்ற விரிந்தவுலகத்திற் பெரும் பகுதியாயுள்ள நம் பாரத நாட்டிலே மக்கள் அறியாமையால் நேரும் கொடுமைக்கோ அளவில்லை. எந்நாள் யாரால் வகுப்பு வித்தியாசங்கள் ஏற்பட்டனவோ அந்நாள் முதல் இந்நாள் வரையும் வகுப்பு மனமாற்சல்லியங்கள் வளர்ந்து கொண்டேவருகின்றன. வகுப்பு வாதத்தை ஒழிக்க வேண்டுமென்ற வாய் வேதாந்திகள் வகுப்பு வித்தியாசம் வளர்வதற்கு மறைவிலிருந்து கொண்டு யாகம் வளர்க்கிறார்கள். சகலரையும் தாழ்த்தி தாங்கள் எப்போதும் சுகஜீவியாயிருப்பதற்கு எதை எதை எப்படி எல்லாம் செய்ய வேண்டுமோ அதைஅதையெல்லாம் கொஞ்சமும் தாட்சண்யமின்றிச் செய்து விடுகின்றார்கள். வேதப்புரட்டு, சாஸ்திரத்திருட்டு, சட்டப்புரட்டுகள் எல்லாம் செய்து விடுகிறார்கள். இடங் கண்டு சாஸ்திரம், சமயம்போல் சட்டம் பேசுவதற்கு அஞ்சுவதில்லை. இவ்வநீதி சகவாசத் தோசத்தால் ஒவ்வொரு வகுப்பிலும் தொத்து வியாதிபோல் பற்றி நூற்றுக்கணக்கான வருடங்களாக நம் நாட்டைப் பாழாக்கி வருகிறது.

ஏழு கோடி மக்கள் கேவலம் மிருகத்தினுங் கேடாய்ப் பார்க்கக் கூடாது; தொடக் கூடாது; தெருவில் நடக்கக் கூடாது; தண்ணீரில் குளிக்கக் கூடாது; குடிக்கவுங் கூடாது என்று முழு மக்களால் படுங் கஷ்டத்திற்கு ஒரு எல்லை யுண்டா? அந்தோ! நாகரீகம் பெற்றாலும் நானும் ஒரு மனிதனென்று சொல்லிக் கொள்ளவுங்கூட உரிமையுண்டா? இக்கொடுமைகள் நீங்க வேண்டும்; சுயேச்சையாய்ச் சுயமரியாதையுடன் வாழ வேண்டு மென்றால் அதற்கு வம்பு செய்யாமல் வழி திறந்து விடுவதுண்டா? ஒவ்வொரு வகுப்பாரும் தாங்கள் உள்ளும் புறமும் நல்லவராக வேண்டும்; தங்களை அழைப்பதிலும் சுயமரியாதை காண வேண்டும் என்று விரும்புவதில் யாது குற்றம்? உதாரணமாக சான்றான் சாணன் என மருவியது. சாணன்-கெட்டிக்காரன் என ஒலித்தாலும் ஏதோ அதை உபயோகிக்கின்றவர்கள் கேவலமாய்க் கருதுகிறார்களென்றே தங்களை உள்ளபடி அழைப்பதை விட்டு திரித்துக் கூறக் கூடாதென்று கேட்டுக் கொண்டதற்கிணங்கி கவர்ன்மெண்டார் அப்பதத்தை உபயோகிக்கலாகாதென்று ஆக்ஞாபித்திருப்பதை யாவரும் அறிவர். அவ்வாறிருக்க இன்னும் சிலர் முட்டாள்த்தனமாகப் பேசும் போதும், எழுதும்போதும் அப்பதத்தை உபயோகித்து மன வேதனையை உண்டுபண்ணுகிறார்கள். இத்தொல்லைகளை யெல்லாம் உற்பத்தி செய்வதற்கு மூல காரணம் வருணாச்சிரமம். வருணாச்சிரம விதிப்படியாவது இப்போது வருணங்களில்லை. ஆகையால் வருண பேதங்களை விட்டுவிட வேண்டுமென்றால் வருணத்தில் நடுவிலுள்ளதுதான் அற்றுப் போச்சு. முதலுங் கடையுஞ் சாகவில்லை. ஆகவே பிராமணன் தவிர மற்றவர்களெல்லாம் சூத்திரர்களென்கிறார்கள். பிராமணன் எவ்வளவு இழி தொழில்களைச் செய்தாலும் அவன் மகன் அவனே யாம். மற்றவர்கள் எப்படியும் சூத்திரர்கள் தானாம். இதென்ன கொடுமை! இக்கொடுமையும் கேவலமுமான மூல பதத்தை மாற்றிவிட வேண்டுமென்று கற்றோரும், கனவான்களும் பெரு முயற்சி செய்து கொண்டுவருகிறார்கள். அதற்காக சர்வதியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். சத்தியாக்கிரகம் நடத்தவும் பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிராமணால்லாத பெரு மக்கள் பெரு முயற்சியைக் கண்ட முழு மக்கள் ஒருவாறு உணர்ந்து வருகிறார்களென்று தான் சொல்ல வேண்டும். இன்னும்சில நாட்களுக்குள் அப்பதப் பிரயோகம் அறவே எடுபட்டுப் போகவுங் கூடும். ஆதிகாலத் தமிழ் நாட்டைப்போல் மக்கள் மருடப் பெயரின்றி அழைக்க நேரிட்டாலும் நேரிடலாம். இவ்வளவு பக்குவதிசையான இந்த நேரத்தில் வெடிகுண்டெறிந்தாற்போல் சர்க்காரே சட்டசபையில் ஜாதிப் பாகுபாட்டைக் கிளப்பி சூத்திரன் என்ற மூல பதத்தை உபயோகப் படுத்தி யிருக்கிறார்கள். அதாவது, சமீபத்திற் கூடிய சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் ஸ்ரீமான் சல்டானா என்ற ஒரு அங்கத்தினர் ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் சென்ற ஆறு மாதங்களில் எத்தனை ஸ்தாபனங்கள் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டதென்றும், நியமனம் செய்யப்பட்டவர்கள் எந்தெந்த வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் ஒரு கேள்வி கேட்டிருந்தார். அதற்கு சர்க்கார் பதில் சொல்லும்போது தான் வெடிகுண்டைப்போல் ஒரு வார்த்தையைப் பிரயோகம் பண்ணியிருக்கிறார்கள். ஜாதி அல்லது வகுப்பு என்ற முறையில்,

ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், இந்திய கிருஸ்தவர், முகம்தியர், ஆதித்திராவிடர், ஆதிஆந்திரர், விஸ்வப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், ஒடுக்கப்பட்ட வகுப்பார், பிற்பட்ட வகுப்பார் என்று சொல்லி யிருக்கிறார்கள். இதில் எந்த எந்த வகுப்பாரை எந்தெந்த ஜாதிக்குள் திணித்து வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. அதிருக்கட்டும். சூத்திரன் என்றால்,

"பக்தியினால் பிராமணனுக்கு வேலை செய்கிறவன்; யுத்தத்தில் தோற்று அடிமையானவன்; பிராமணனின் வைப்பாட்டி மகன்; விலைக்கு வாங்கப்பட்டவன்; பரம்பரையாய்ப் பிராமணனுக்குத் தொண்டு செய்து வருகின்றவன்.

சூத்திரன் பிராமணனுக்குத் தொண்டு செய்தாலன்றி மோட்சமில்லை. சூத்திரன் பொருள் சம்பாதிக்கக் கூடாது. மீறிச் சம்பாதித்தால் பிராமணன் அதைப் பிடுங்கிக் கொள்ளலாம்.

பிராமணனுடன் சரியாய்ச் சூத்திரன் உட்கார்ந்தால் அவன் குண்டியை அறுத்து ஊரைவிட்டுத் துரத்திவிட வேண்டும்.

சூத்திரனால் காக்கப்படாத பிராமண க்ஷத்திரிய வைசிய ஜாதிப் பெண்ணைப் புணர்ந்தால் பீஜம் ஆண் குறியை அறுத்துவிட வேண்டும். காக்கப்பட்ட பெண்ணைப் புணர்ந்தால் தேக முழுதும் சித்திரவதை செய்து வெட்டி விடுவதுடன் அவனுடைய எல்லாப் பொருள்களையும் பிடுங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் காக்கப்பட்ட சூத்திரக் கற்புடைய பெண்ணை பிராமணன் வலுவில் புணர்ந்தால் ஆயிரம் பணமட்டும் அபாரதம் போடலாம்" என்று பிராமணச் சட்டமாகிய மனுதர்ம சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்பொல்லாப் பிராமணச் சட்டங்களைப் பிரிட்டிஷ் சட்டத்தால் மாற்றிவிடப் பார்க்கும்போது பிரிட்டிஷ் சட்டத்திலும் இப்பதம் பிரயோகிக்கப்படுவது பிரிட்டிஷ்சூட்சியா? பிராமணச் சூட்சியா? என்றுதான் கேட்கிறோம். இக்கொடுமையான காரியங்கள் அறவே ஒழிந்து மக்கள் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் மக்கள் முழுமனதுடன் ஒற்று வேலை செய்தாலன்றி ஒன்றும் பயன்படாதென்று சொல்ல வேண்டியதில்லை. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடுவதா; பிராமணச் சூட்சியிலிருந்து விடுபடுவதாவென்ற பெரு மிருகவலைகள் பிராமணரல்லாத பெரு மக்களுக் கேற்பட்டிருப்பது பற்றியே நாம் எதை நினைத்தழுவது! என்றெழுதினோம்.

---

## "ஊழியன்" தவறு.

மகாத்மாகாந்தி ராஜபாளையம், கோயில்பட்டி முதலிய விடங்களிற் பேசியபோது பாண்டிய நாட்டில் மட்டும் நாடார்களைக் கோயிலுக்குள் விடாததைப்பற்றிக் கண்டித்துச் சொல்லி இருப்பதை "ஊழியன்" பத்திரிகை ஆதரித்து சில அனுதாபமான செய்திகளையும் தெரிவித்து விட்டு மூன்று ஜில்லாக்களில் மட்டும் விடாத காரணமென்ன வென்று மகாத்மா மயங்கினதற்குப் பின் வருங் காரணங்கூறுகிறது:—

முன்னாள் நாடார்களைக் கோயில்கட்குள் விடாததற்குக் காரணம் இருந்திருக்கலாம். கள் இறக்கும் தொழிலைப்பற்றி இவ்வேற்பாடு வைத்திருக்கக்கூடும். இன்று அம்முறை கொள்வதற்குப் பொருளுண்டோ? நாடார் என்போர் அனைவரும் இன்று கள் இறக்குகின்றனரா? கள் இறக்கும் மற்றவர் இன்று கோயிலுக்குள் விடப்படாமலிருக்கின்றனரா? சாற்றை விடுத்து சக்கையைப் பிடித்துக் கொண்டிருத்தல் அறிவீனம்.

இவ்வாறு "ஊழியன்" மகாத்மாவைப்பார்க்கிலும் மிக மன முருகிக் கூறியிருப்பதற்கு மிகவும் நன்றி கூறுகிறோம். ஆனால் கோயிலுக்குள் விடப்படாதற்கு "ஊழியன்" சொல்லும் காரணம் மிகத்தவறு என்றே சொல்வோம்.

முன்னாளில் நாடார்கள் கள் இறக்கவில்லை; இந்நாளிலும் நாடார் எல்லோரும் இறக்கவில்லை. கால மாறுதலால் எங்கேயோ ஒரு மூலையில் கஷ்ட காலத்தை முன்னிட்டு வேதம் ஓதும் பிராமணன் கேவலமான பல இழி தொழில்களை இப்போது நடத்திவருவது போல் ஒரு சிலர் இறக்கிவரலாம். பரம்பரையாகக் கள் இறக்கும் தொழிலாளர் வேறு. என்றாலும் அதைப் பல ஜாதியார்களும் நடத்திவருகின்றார்கள். இதை ஒரு காரணமாகக்கொண்டு நாடார்கள் தடைசெய்யப் பட்டிருந்தால் எங்கும் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். கள் விற்குந்தொழில், குடிக்குந்தொழில், கொலைத்தொழில், மச்சம் மாமிசத்தொழில், விபசாரத்தொழில், டாப்பர்த்தொழில் செய்பவர்களையும் தடைசெய்திருக்கவேண்டும். நாடார்கள் பண்டைக்காலத்தில் பாண்டிநாட்டை ஆண்டுவந்த அரச குலத்தவராவர். நாயக்கர் அரசு ஏற்பட்ட பின்னுண்டான மாறுதலால் கோயில்களின் மேலவாசல் பாத்தியங்களால் ஏற்பட்ட குழப்பத்தால்அதிகாரத்தோரணையில் தடைசெய்தும், நாடார்களே பகிஷ்கரித்துமுள்ள வழக்கால் இவ்வழக்கம் ஏற்பட்டதேயன்றி வேறல்ல. இதற்கு வேண்டிய பிரமாணங்கள் "ஊழியன்" விரும்பின் விளம்பலாம். இதெல்லாம் மகாத்மாவுக்கு நாடார்களாவது கூடவே போகும் ஆச்சாரியாராவது சரியாக எடுத்துச் சொல்லியிருந்தால் மகாத்மா காரணந்தெரியாமல் மயங்கியிருக்கமாட்டார். மகாத்மா நாடார்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் வெகு நிதானத்துடன் பேசியிருப்பதிலிருந்து உண்மையில் அவர் காரணம் விளங்காமல்த் தான் பேசியிருக்கிறார் என்று விளங்குகிறது. அவசரப்பட்டு ஏதாவது ஒரு காரணந் தெரியாமல் சொல்லிவிடக் கூடாதென்று ஒழுக்கமும் உயர் நடையுமுள்ள ஒருஜாதியைத்தடை செய்வது தவறு என்பதை இடித்துரைத்திருக்கிறார். அவர் வார்த்தைகளில் எவ்வளவு நிதானம் அடங்கியுள்ள தென்பதறியாமல் "ஊழியன்" தவறான அபிப்பிராயத்தை வெளியிட்டது மிகத்தவறென்றே மறுமுறையுஞ் சொல்கிறோம்.

"ஊழியன்" இவ்வாறு சொல்லிவிட்டதினாலே நாடார் சமூகமும் முழுகிவிடப்போவதில்லை. நம் நாட்டுச் சீர்திருத்தக்காரர்களே நம் நாட்டு ஜனங்கள் வரலாறறியாமல் எங்கேயோ இருந்து கொண்டு வாயில் வந்ததைப் பேசியும் எழுதியும் வருவது மக்களுக்கு மனக்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

கலக்கத்தையும், வீண் குழப்பத்தையு முண்டுபண்ணு மென்றே வருந்துகிறோம்.

ஆகையால் "ஊழியன்" தவறைத் திருத்திக்கொள்ளுமா? இனி தவறுஇருக்குமா? சந்தேகமிருப்பின் கேட்டுக்கொள்ளுமா? என்று கேட்கின்றோம்.

## தேவஸ்தானக் கமிட்டித் தேர்தல்கள்.

சென்னை மாகாணத் தேவஸ்தானச் சீர்திருத்தச் சட்டப்படி ஒவ்வொரு தேவஸ்தானத்திற்கும் கமிட்டி மெம்பர்த் தேர்தல் நடைபெற்று வருகின்றது. நவம்பர் டிசம்பர் மாதங்களில் தென்ஜில்லாத் தேவஸ்தானங்களின் கமிட்டித் தேர்தல்கள்நடைபெறுமென்று தெரிய வருவதால் நாடார்களும் ஒவ்வோரிடத்திலும் அபேட்சகராய் முன்வர முயற்சிக்க வேண்டும்.

முக்கியமாக மதுரை தேவஸ்தானத்துக்கு 14—15–வது வார்டுகளுக்கு ஒரு பிரதிநிதியைத்தான் தெரிந்தெடுக்கப் பொதுவான பாத்தியமிருக்கிறது. அவ்வார்டுகளில் ஷை கமிட்டிக்கு வாக்குச் செய்யும் யோக்கியதை பெற்றவர்கள் மொத்தத்தில் நாலிலொரு பாகம் நாடார்குல ஓட்டர்களிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகையால் மதுரை நாடார்களில் ஒருவர் அபேட்சகராய் நின்றால் வெற்றிபெறக்கூடும். காமதமின்றித் தக்க கனவானொருவரைத் தெரிந்து அந்தஸ்தானத்திற்கு அபேட்சகராய் நிறுத்தும்படி மதுரை நாடார் மகாஜனங்கள் முயற்சி செய்யும்படி வேண்டுகிறோம்.

நாடார்மகாஜன சங்கமும்அதற்கு வேண்டிய முயற்சி எடுத்து முன் வருவோருக்குத் தக்க உதவியும் செய்யக்கோருகிறோம். சங்கம் புது அதிகாரிகளுக்குக் கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தை விட்டு விடாமல் மதுரை நாடார் மகாஜனங்களை ஒன்றுகூட்டி தக்கது செய்வார்களென்று நம்புகின்றோம்.

நாம் பெறவேண்டிய முக்கியமான உரிமைகளில் முக்கியமானது தேவஸ்தானமாகும். அதை அடையத்தக்க பக்குவமானகாலம் நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அதற்கனுகூலமாக பல ஜன சமூகத்தார் அன்பும் அபிமானமுமிருந்துவருகின்றன. யார் நம்மீது உள்ளன்புடையார் என்று அறியச் சமயமும் கிடைத்திருக்கிறது. ஆகையால் மதுரை நாடார் மகாஜனங்கள் இதற்கு முன் நடந்த பல உள் வேற்றுமைகளையெல்லாம் மறந்துவிட்டு ஒன்றுபட்டுஇவ்வுரிமைப் போரில் பூரண வெற்றியடைய ஒவ்வொருவரும் கங்கணமணிந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். மதுரைக் கோயில் பாத்தியம் பெறுவதற்கு சத்தியாக்கிரகம் பண்ணுங்கள்; தக்க உதவி செய்கிறோமென்று தக்க மனிதர்கள் வெகு நாளாகச் சொல்லிவருகின்றார்கள். தேவஸ்தானக்கமிட்டி அங்கத்தினர்களில் ஒரு நாடார் அங்கத்தினராக அவர்களுடைய ஒத்தாசைகள் எவ்வாறிருக்கு மென்பதை அறிய மதுரை நாடார்கள் இது சமயம் தவறிவிடக்கூடாது என்பதை நினைப்பூட்டுகிறோம். இது விஷயமாக மதுரை நாடார்கள்

## சமாதானங்கள்.

### மரூஉ மொழிப் பிரயோகம் வாபஸ்.

தென்னிந்திய சைவ நூற் பதிப்புக் கழக "செந்தமிழ்ச்செல்வி" வெளியீட்டில் 'சான்றார்' என்பதன் மரூஉமொழியாய் உலகவழக்கில் உள்ள 'சாணார்' என்ற சொல் சில இடங்களில் வருவது பற்றி 2-10-27-ல் வெளியான 'குடி அரசு' 12-ம் பக்கத்தில் 'மரூஉமொழிப் பிரயோகம்' என்ற தலைப்பின் கீழ், அந்த "மரூஉ மொழி இழிவாக எண்ணப்படுதலால் அதனை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று திருவாளர் சிவஞானபுரம் ஆ. மதன பாண்டிய நாடார் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். "கல்வி கேள்விகளால் நிரம்பியவர் சான்றார் என்ற ஜாதியினர்" என்று இரு பொருள் குறிக்கும் கவர்படுபொருள் மொழியான "சான்றார்" போலன்றிச் 'சாணார்' என்பது கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் எளிது பொருள் விளங்குவதாயிருப்பது பற்றி அதனை வழங்கினேனேயன்றி வேறெது குறித்தும் வழங்கினேனில்லை. சான்றார் குலத்தினரை இழிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் எப்போதும் இல்லேனுதலால் அவர்கள் விரும்புகிறபடியே, அந்த "மரூஉ மொழியை வாபஸ்" வாங்கிக்கொள்ளுகிறேன்.

இனி வெளிப்படும் பகுதிகளில் 'சாணார்' என்ற சொல் வந்தால் அது வருமிடமெல்லாவற்றினும் 'சான்றார்' என்று திருத்திப் பதிப்பிக்கும்படி "செந்தமிழ்ச் செல்வி" பத்திராதிபரவர்களுக்கு எழுதியிருக்கின்றேன்.

வெ. ப. சுப்ரமணிய முதலியார்.

"குடியரசு"

### வஞ்சகமொன்றுமில்லை.

கண்ணோட்டத்தின் கீழ், சிலநாள் முன் 'ஹிந்து'ப் பத்திரிகைக்கு திவான்பகதூர் ராமச்சந்திரராவ் திருநெல்வேலிக் குழப்பத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதி, அதிலிருந்து சில நீதிகளை இக்காலத்துக்கேற்றவாறு வெளிப்படுத்த முயன்ற அநீதிகளையும் தத்துவங்களையும் குறித்தே எழுதவேண்டி அவ்வாறு எழுதும்போது மேற்கூடிய வியாசத்தைக் குறிக்கவேண்டி வந்தது. அதன் நிமித்தம் அவ்விரு சமுகத்தினரின் பெயர்கள் அதில் காணப்பட்டவிதமே எடுத்தெழுதலாயினேனேயன்றி எச்சமுகத்தாரையும் இழிவு படுத்தவோ, அவமதிக்கவோ, எண்ணி எழுதவில்லை என்பது அக்'கண்ணோட்ட'க் குறிப்பினின்றே வெளிப்படும். தவிர 'மித்திரன்' வெகு காலமாக நாடார்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டு வந்திருக்க, யாதொரு காரணமுமன்னியில் அவர்களை இழிவுபடுத்த உத்தேசித்து எழுதினதாகக் கூறுவது சரியாகாது. ஆகையால் அப்பகுதியினரைக் குறிக்க மற்றொரு பத்திரிகையில் காணப்பட்டதை அப்படியே எடுத்துக்குறிப்பிட்டது குற்றமாயின் வருந்தத்தக்கதே. எச்சமுகத்தாரையும் இழிவு படுத்த உத்தேசம் 'வழிப்போக்க'னுக்கு இல்லை என்பதை மறுபடியும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

"சுதேச மித்திரன்."

---

என்ன செய்யப்போகிறார்கள் என்பதை அறிய ஒவ்வொரு நாளிலும் எதிர்பார்த்திருக்கிறோம்.

### விடுமுறை.

இன்று தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு நம் மித்திரன் காரியாலயத்திற்கு விடுமுறை யாகையால் அடுத்து 31—10—27–ல் வெளியிடாக வேண்டிய சஞ்சிகை நிறுத்தப்பெற்றுஅடுத்து7-11-27ல் வெளியிடப் பெறுமென்பதைச் சந்தா நேயர்களறிய வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

## செய்தித்திரட்டு.

வடக்கே நிக்கல்பூர் என்னுமிடத்தில் 100 முஸ்லீம்கள் இந்துக்களாக மாறிவிட்டனராம்.

* *

நீண்ட நாட் பிரயாணத்திலுள்ள கப்பற் பிரயாணிகளுக்கனுகூலமாக சில பெரிய கப்பல்களில் காய்கறித் தோட்டம் போட்டு விளை பொருள்களை பிரயாணிகளுக்குக் கப்பலிலேயே விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வருகின்றனராம்.

* *

கரக்பூர் ரெயில்வே பட்டறைகளில் வேலைபார்த்துவரும்தொழிலாளர் சுமார் 12000 பேர்களில் சிக்கனச் செலவு காரணமாய் 2000 பேர்களை நீக்க, ஏனையவர் ஆட்களை விலக்காமலே சிக்கனப்படுத்த எதுஉண்டென எவ்வளவோ கூறியும் மறுக்கப்பட்டு விட்டதால் அவர்கள் வேலை நிறுத்தம் போட்டிருக்கின்றனர். விசேஷ பரபரப்பேற்பட்டிருக்கிறது.

* *

கிராம போன் கண்டுபிடித்தவரும், இன்னும் மின்சார சக்திகொண்டு பற்பல அற்புதங்களைக் கண்டுபிடித்த வல்லுனருமாகிய எடிசன் இனி இறந்தவர்களுடன் சம்பாஷிப்பது பற்றிய ஆராய்ச்சியில் இறங்குவதாகத் தெரிகிறது.

* *

கச்சார் என்னும் ஊரில் ஹல்தார் என்ற பையன் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கையில் ஓர் புலி வந்து அவனைத்தாக்க உடனே அவன் வெகுதீரமாய்அதனிரு கால்களையும் பிடித்து கீழ் தாழ்த்தி எழுந்திருக்கவிடாது மிதித்துக்கொண்டு சப்தமிட, மற்றொருவன் வந்து அதைக் கொன்றானாம்.

* *

தஞ்சையிலிருந்துதிருச்சினாப்பள்ளிக்கு வந்திருந்த கல் தச்சனொருவன் திருச்சி மலையுச்சியிலுள்ள விபூஷணர் பாதத்தைப் பார்க்கும் பொருட்டு ஏறிக்கொண்டிருக்கையில் தவறி விழுந்து சிவபாதமடைந்துவிட்டான். விதியை வெல்லப்போமோ!

* *

திருச்சினாப்பள்ளியிலிருந்து புதுக்கோட்டை, காரைக்குடி வழியாக மானாமதுரைக்குப் புதிதாக ரயில்வே போட ரயில்வே போர்டார் அனுமதித்துவிட்டார்.

* *

சிட்டகாங்கு ஜில்லா குமாபீலில் ஓர் முகமதியர் தனது மனைவியிடம் கறி சமைக்கும்படி கொடுத்துச் சென்ற மாமிசத்தை ஓர் நாய் தின்றுவிட்டுப் போனதால் உடனே அவனது மனைவி அவனது முதற்றார மகனைக்கொன்று கறி சமைத்துப் படைத்துவிட்டாளாம். புருஷனுக்கு விஷயம் புலனாகி வெளிப்பரவ போலீஸார் இருவரையும் கைது செய்திருக்கின்றனர்.

* *

நியூயார்க்நகரில் பார்க் அவென்யூ என்ற தெருவில் வருடம் 10 ஆயிரம் பவுன் வருமானமுள்ளவன் ஏழையெனக் கருதப்படுகிறானாம். என்னே செல்வச் செழிப்பு!

* *

இந்தியாவிற்கு இவ்வருடம் ராயல் கமிஷன் வருமென்றெதிர்பார்க்கப்படும் வண்ணம் வராதென டைம்ஸ் பத்திரிகை கூறுகிறதாம்.

* *

இலங்கையில் எத்தொழிலும் அபிவிர்த்தியடைகிறதென்பதற்கறிகுறியாக 500, 600 இடங்களில் புதிதாக டெலிபோன் கம்பிகள் இணைக்க மனுச்செய்திருக்கிறார்கள்.

* *

காங்கிரஸ் வாரத்தில் கூடும் அகில இந்திய தேசிய ஆசார சீர்திருத்த மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக டாக்டர் முத்துலட்சுமியம்மாள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* *

கங்காநதியில் 10-வயதுள்ள சிறுவன் 5-55 மணியில் 30 மைல்கள் நீந்தி பரிசு பெற்றிருக்கிறானாம்.

* *

கல்கத்தாவில் 60 வயதுள்ள வங்காளிக்கிழவர் அவ்விடம் காலேஜ் சதுக்கத்துக்குளத்தின் குறுக்கே 202 முறை நீந்தினராம். மொத்தம் 11. மைல் நீந்தினதாகிறதாம்.

* *

மிஸ். மேயோ எழுதிய புத்தகத்திற்கு பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகைகள் மூலம் மறுப்பெழுத மகாத்மா கேட்டுக்கொண்டபடி ஸ்ரீ ஆண்ட்ரூஸ் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

* *

இங்கிலாந்தில் சமீபத்தில் காலஞ்சென்ற ஓர் செல்வர் தனக்கு 20,000 பவுன்களிருந்தும் மரணச் சடங்குக்கு 25 பவுனுக்கு மேல் செவழிக்கக்கூடாதென்றும், ஒரு வரும் துக்கங்கொள்ளக் கூடாதென்றும் உயில் எழுதிவைத்திருந்தாராம்.

* *

சமீபத்தில் செர்போனில் நடைபெறவிருக்கும் சூக்ஷ்ம ஆராய்ச்சி மகாநாட்டில் போலந்திலிருந்து 'வரும் நாய் ஒன்று பேசுமாம். அது குலைக்கும் புதிய முறையினால் பேச்சு விளங்குமாம். அது சமயம் ஜர்மன் ஆசிரியரொருவர் தமது யோக சக்தியால் சிறிது பொழுது ஆகாயத்தில் பறந்து நிற்கும் காக்ஷியும் நடைபெறுமாம்.

* *

கல் முதலிய லோகங்களிலும் ஆண் பெண் என்ற பாகுபாடுகளுண்டென லெலின் கிராடில் ஆராய்ச்சியாளர் டாக்டர் மணிலால் கூறுகிறாராம்.

* *

மகாத்மாகாந்தியின் தமிழ்நாட்டின் சுற்றுப்பிரயாண ஆரம்பத்திலிருந்து மதுரை போய்ச் சேரும்வரை கதர் நிதிக்காக அளிக்கப்பட்ட பணம் ரூ 94,045—1—6.

* *

வியன்னாநகரில் ஓர் பிரமாண்டமான கடிகாரமிருக்கிறதாம். அதில் சரித்திரப் பிரசித்தி பெற்ற பன்னிருவர் உருவங்கள் 6 அடி நீளத்தில் அமைத்து வைத்து ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொரு உருவமும் சங்கீததொனியுடன் தோன்றி ஒவ்வொன்றும் வெவ்வேறு பாடல் பாடிக்கொண்டிருக்குமாறு ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாம்.

* *

இங்கிலாந்தில் தபால் இலாகா விதிகளின்படி மனிதர்களையும் குழந்தைகளையும் தபாலில் அனுப்பலாமாம்.

* *

பிறவியிலேயே நேத்திர மிழந்தள மிஸ். அல்மீடா ஆடம்ஸ் என்னும் ஆங்கிலமாது பிற உதவி சிறிதுமின்றி 1 வருடத்தில் ஐரோப்பா முழுதும் பிரயாணம் முடித்து இப்போது அமெரிக்கா சென்றிருக்கிறாராம்.

* *

உலகில் மிக வேகமுள்ள ஆணும் பெண்ணும் முறையே சார்லிபாடாக் எனும் ஆங்கிலேயரும், பூமி கோடிரோ என்னும் ஜப்பானிய மாதுமேயாவர். இவர்கள் 100 மீட்டர் தூரத்தை முறையே 10½ வினாடியிலும் 10¾ வினாடியிலும் கடந்திருக்கிறார்கள்.

* *

பசிபிக் சமுத்திரத்தின் விஸ்தீரணம் 7 கோடி சதுர மைலாம். இது உலகிலுள்ள நிலப் பிரதேசங்களின் மொத்த விஸ்தீரணத்தைவிட அதிகமாம்.

* *

ஸ்திரீகளின் தொண்டை நரம்புகள் ஆண்களுடைய தொண்டை நரம்புகளைப் பார்க்கிலும் குட்டையாம். இதனால் ஆண்களைவிட ஸ்திரீகளுக்குப் பேசுவதில் பிரயாசைக் குறைவாம்.

* *

ஓர் எண்ணம் உதயமாவதற்கு புத்திக்கூர் உள்ளவர்களுக்கு ஒரு விநாடியில் 10ல் ஒரு பாகமும், சாதாரணமானவருக்கு 3-ல் ஒருபாகமும், மந்த புத்தியுள்ளவருக்கு 1 விநாடியும் அதற்கு மேலும் தேவையாம்.

* *

வானத்தில் தோன்றும் ஒரே ஒரு மின்னலின் மின்சார சக்தியைக்கொண்டு 40 வருடம் ஒரு மாளிகைக்கு மின்சார விளக்குப் போடலாமாம்.

* *

மெக்ஸிகோ நாட்டில் அமெரிக்க இந்தியர்கள் தங்கள் வீடுகளில் இருபதடி நீளமுள்ளதும், யாதொரு பயங்கரமில்லாததுமான ஒருவகை பாம்புகளை வளர்த்து காவலுக்குப் பழக்கி வைத்திருக்கிறார்களாம்.

* *

நெல்லூர் ஜில்லா பொதலக்கூர் வட்டகையில் புத்தீசல்கள் ஏராளமாய் விற்பனைக்கு வருகின்றனவாம். கோட்டைக்கு விலை ரூ 26-10-8 ஆ. விருக்கிறதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 20

போனிக்ஸிலிருந்து பத்திரிகையான 'இந்தியன் ஒப்பினிய'னுடைய முதல் பிரதியைப் பிரசுரிப்பதானது இலேசான காரியமாக இருக்கவில்லை. முன்னதாக ஜாக்கிரதையோடு நான் இரண்டு காரியங்களைக் கையாளாதிருப்பேனுல் பத்திரிகையின் முதல் இதழ் காலத்தில் வெளிவராமலோ, அல்லது நின்றேபோயிருக்கும். அக்கூடத்தில் ஓர் இஞ்ஜினைக்கொண்டு அச்சடிக்க நான் விரும்பவில்லை. ஆனல் கை இயந்திரத்தின் உதவியைக் கொண்டே விவசாயத் தொழிலைக் கையால் செய்கிற இடத்தில் அப்படிச் செய்வது அசாத்தியமாக இருந்ததால் ஓர் ஆயில் இஞ்ஜினுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். ஆயினும் இஞ்ஜின் செவ்வையாக வேலை செய்யாவிடில் எப்படியாவது பத்திரிகையை அச்சிடத்தக்க வேறு ஏற்பாடோடு இருக்க வேண்டுமென்று ஸ்ரீ. வெஸ்ட்டிடம் நான் கூறியிருந்தேனுதலின் கையால் ஓட்டிவைக்கக்கூடிய ஓர் சக்கரத்தோடு அவர் தயாராக இருந்தார்.

### தொடக்கத்தில் தொல்லை.

பத்திரிகை, தினசரிப் பத்திரிகை போன்ற அளவுடையது. அவ்வளவு அகலமான காகிதத்தில் அச்சடிப்பது தூரத்திலுள்ள போனிக்ஸ் போன்ற இடத்தில் சுலபமாக இருக்காதென்று எண்ணினேம். தவிர அவசியமுண்டானல் கை இயந்திரத்தாலும் அச்சிடவேண்டுமாதலால் பத்திரிகை வெளிவரவேண்டிய நாளுக்கு முந்திய தினங்களில் இரவில் நாங்கள் நெடுநேரம் கண்விழித்திருக்கும்படி நேரிட்டது. இளைஞர், வயோதிகர் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் பத்திரிகை மடிக்க இரவு 10-மணிக்கு ஆரம்பித்து 12-மணிக்கு முடித்தோம். ஆனல் முதல் நாள் இராத்திரி ஏற்பட்ட சம்பவத்தை என்றும் எங்களால் மறக்கமுடியாது. பாரத்தை இயந்திரத்தில் ஏற்றினேம். ஆனல் இயந்திரம் அசையவில்லை. நாங்கள் டர்பானிலிருந்து இஞ்ஜினியர் ஒருவரை இயந்திரத்தை அமைக்கவும், அதனை ஓட்டுவிக்கவும் வரவழைத்திருந்தோம். அந்த இஞ்ஜினியரும், ஸ்ரீ. வெஸ்ட்டும்இயந்திரத்தைஓட்ட இயன்றவரையில் முயன்றும் முடியாமல் போய்விட்டது. இதனல் அனைவருக்கும் கவலை யுண்டாயிற்று. கடைசியில் ஸ்ரீ. வெஸ்ட் கண்ணீரும் கவலையுமாக என்னிடம் வந்து என்ன செய்வதெனத் தெரியாமல் இஞ்ஜின் நகரவில்லையே; இதனல் பத்திரிகையைக் காலதாமதமின்றி வெளியிட முடியாது போலிருக்கிறதே என்றார்.

"அவ்விதமாயின் அதற்கு நாம் தான் என்ன செய்வது? இதன் பொருட்டு வருந்துவதில் பயனில்லை. இன்னும் நம்மால் முடிந்ததைச் செய்து பார்க்கலாம். கையால் ஓட்டக்கூடிய சக்கரம் தயாராக இருக்கிறதல்லவா?" என்று கேட்டு அவருக்கு ஆறுதலுண்டாகும் வண்ணம் பேசினேன்.

"சக்கரம் தயாராக இருக்கிறது. ஆனல் அதனை மாற்றி மாற்றி ஓட்டிவைக்க நான்கு நான்கு பேராக ஆட்கள் வேண்டுமே. அதற்குத் தேவையானவர்கள் நம்மிட மில்லாததோடு, இருப்பவர்களும் களைத்திருக்கிறார்களே" என ஸ்ரீ. வெஸ்ட் பதிலுரைத்தார்.

### தச்சர்கள் உதவி.

கட்டட வேலை இன்னும் முடியாததால் தச்சர்கள் எங்களிடமே யிருந்தார்கள். அவர்கள் அது சமயம் கீழே தூங்கிக்கொண்டு இருந்தனர். ஆகவே நான் "அவர்களை நாம் உபயோகித்துக் கொள்ளக் கூடாதா? இந்த யோசனையைக்கொண்டு இரவு முழுவதும் வேலை செய்து பார்க்கலா"மென்று சொன்னேன்.

"நமது ஆட்களும் களைத்துப்போயிருக்கிறார்கள். ஆனல் அவர்களை எவ்வாறு எழுப்புவது" என ஸ்ரீ. வெஸ்ட் கேட்டார்.

அதற்கு நான் "அது விஷயத்தை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று சொன்னேன். அப்படியானல் வேலையை முடித்து விடலாமென்று ஸ்ரீ. வெஸ்ட் ஒப்புக்கொண்டார்.

நான் தச்சர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி அவர்களது உதவியை நாடினேன். அதற்கு அவர்கள் "அவசரத்திற்கு ஆகாமல் நாங்கள் இருந்து என்ன பயன்? நீங்கள் களைப்பாறுங்கள். நாங்கள் சக்கரத்தைச் சுற்றுகிறோம். எங்களுக்கு இது சுலபமான வேலைதான்" என்று சொன்னார்கள். எங்கள் ஆட்களும் வேலை செய்யத் தயாராக இருந்தனர்.

### அந்தத்தில் ஆனந்தம்.

இதனல் ஸ்ரீ. வெஸ்ட்டுக்கு தைரியமுண்டாயிற்று. வேலை தொடங்கப்பட்டதும் அவர் சந்தோஷமாகப்பாடினார். நானும் தச்சர்களோடு சேர்ந்து வேலை செய்தேன். ஏனையோரும்மாற்றி மாற்றிவேலைசெய்தனர். இவ்வாறு காலை 7-மணிவரையில் வேலை செய்தும் பாக்கி செய்யவேண்டிய வேலை அதிகமாகவேயிருந்தது. மறுபடியும் இஞ்ஜினியரை எழுப்பி இஞ்ஜினை ஓட்டச்சொல்லிப் பார்க்கலாமாவென்றும், நல்ல காலமாக இஞ்ஜின் ஓடினல் காலத்தில் வேலையை முடித்துவிடலாமேயென்றும் ஸ்ரீ. வெஸ்ட்டிடம் கலந்து யோசனைசெய்தேன். ஸ்ரீ. வெஸ்ட்டும் அதற்குஉடன்பட்டு இஞ்ஜினியரை எழுப்ப,அவரும்இஞ்ஜின்இருந்த அறைக்குச்சென்றார். என்ன ஆச்சரியம்! இஞ்ஜினியர் மறுபடியும் கைவைத்ததும் இயந்திரம் வேலைசெய்ய ஆரம்பித்தது. இதனைக் கண்டதும் அனைவருக்கும் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. நான் "இது என்ன வினோதம்! இரவு முழுதும் முயன்றும் வேலைசெய்யாத இவ்வியந்திரம் இப்பொழுது எதேச்சையாக வேலை செய்கிறதே" என்று வினவினேன்.

"அதற்கு என்ன காரணத்தைச் சொல்வது" என்று ஸ்ரீ. வெஸ்ட்டோ அல்லது இஞ்ஜினியரோ பதிலுரைத்தார்கள். ஆனல் சொன்னது யார் என்று எனக்கு இதுசமயம் ஞாபகமில்லை. மனிதர்களைப் போல் இயந்திரங்களுக்கும் களைப்பாறவேண்டியிருக்கிறதுபோலும்.

இயந்திரம் பழுதுற்றதுளங்களைப் பரிசோதிக்கவென்றும், நல்ல சமயத்தில் அது வேலைசெய்ய ஆரம்பித்தது அந்தரங்க சுத்தியுடன் நாங்கள் முயற்சி செய்ததன் பலனே யென்றும் நான் எண்ணினேன்.

பத்திரிகை குறித்த காலத்தில் அனுப்பப்பட்டதால் அனைவருக்கும் திருப்தி யுண்டாயிற்று.

ஆரம்பத்திலேயே பத்திரிகை காலத்தில் வெளிவர நாங்கள் முயன்றதால், பிற்காலத்தும் அது தவக்கமின்றி சரியான காலத்தில் வெளிவந்துலவிற்று. எங்களுக்கு தன்னம்பிக்கை ஏற்பட்டதோடல்லாமல் இஞ்ஜினில்லாமல் கையாலேயும் வேலைசெய்யக் காலமும் ஏற்பட்டது. போனிக்ஸ் வாழ்க்கையிலேயே அந்த தினங்கள் விசேஷமானவை யென்பது என் அபிப்பிராயம்.

---

பிறரைச் சேரவொட்டாமல்
கத்தரித்துத் தூர
விலக்குகிறவர்கள்
தாங்களும் பிறகு கடவுளால்
கத்தரிக்கப் பட்டு
ஏமாறுவார்கள்.

---

# பாதிரியார் படாடோபம்.

நாளது மீ 15 உ திருநெல்வேலி ஜில்லா. வீரகேரளம் புதூருக் கடுத்த அதிசயபுரம் என்ற கிராமத்திலுள்ள ஆலயத்தில் சில கிறிஸ்தவர்களுக்கு விவாகச்சடங்குகள் நடைபெற்றன. அச்சடங்குகளை நிறைவேற்றுதற்குச் சுரண்டையிலுள்ள ஸ்ரீமத் டி. சி. ஹாரீஸ் ஐயர் வந்திருந்தார். முற்பகல் பத்தரை மணிக்கு நான்கு மாப்பிள்ளைகளும் அவ்வவர்களுக்கு நியமிக்கப்பெற்ற நான்கு பெண்மக்களும் தத்தம் பந்துமித்திரர் சகிதம் ஆலயத்துட்புகுந்தனர். பாதிரியாரும் பீடத்தருகு எழுந்தருளினர். இத்தம்பதிகள் நால்வர்க்கும் தனித்தனியே திவ்விய நிபந்தனைகளை எடுத்துரைப்பது அம்மம்ம! எவ்வளவு சிரமம் என்றுணர்ந்தாற்போல் அவர் முகத்தில் விசனம் குடிகொண்டிருந்தது. தேவாராதனை தொடங்குமுன்னரே, மணவீட்டார் தத்தம் காணிக்கைகளைக் கொண்டுவந்து படைக்கும்படி கேட்டனர். அவர்களும் அவ்வாறே உரியகாணிக்கைகளைச் செலுத்தினர். பெண்களில் ஒருவர் கல்வி பயிலாதவர் என்ற காரணத்தால் அவர் தந்தையாரிடம் விசேஷக் காணிக்கை ரூபாய் ஒன்று கேட்டனர். அவர் அது வழக்கத்துக்கு விரோதமென்று மறுக்க அதனல் சிறிது நேரம் வாக்குவாதம் நிகழ்ந்தது. பின்னர் பாதிரியார்தமது வித்தை பலிக்காதென்றுணர்ந்தவராய் ஆராதனை நடத்தத் தலைப்பட்டனர்.

"இம் மென்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றாலாயிரம் பாட்டாகாதா" எனக் காளமேகப்புலவர் கூறிய வண்ணம் பாதிரியார் இம்மென்னு முன்னமே எழு செபமும் அம்மென்னுமுன்னமே ஆறுஜெபமும் உச்சரித்து முடித்து, திவ்விய நிபந்தனைகளை வாங்கத் தம்பதிகளிடம் வந்தணுகினர். திவ்ய நிபந்தனைகள் மிகவும் பயபக்திக்குரியவை. அவைகளை வதுவரர்கள் பாதிரியார் செவியிற்படும்படிக்கேயன்றி யாவர்க்கும் கேட்கும்படி உச்சரிப்பது எவ்விடத்திலும் வழக்கமில்லை. அதிலும் நாணம் மிக்க நமது இந்தியமாதர்கள் மிகவும் மெதுவாகவே வாய்க்குள் உச்சரிப்பர். அந்நிபந்தனைகளில் நாயகன் பெயரை ஒவ்வோரிடத்தில்சொல்லவும் நேரிடும். இதுவும் அன்னோர் அங்ஙனம் உச்சரிப்பதற்கு ஒரு காரணமாகும். திவ்விய நிபந்தனைகளை மாப்பிள்ளைகள் தனித்தனியே சொல்லிமுடித்தனர். பின்பு பெண்கள் தனித்தனியே சொல்ல நேர்ந்தது. அவர்கள் மெதுவாக உச்சரிப்பது பாதிரியாருக்குப் பிடித்தமில்லை. சற்று எட்ட நின்று கொண்டு சத்தமிட்டு உச்சரிக்கும்படி ஒவ்வொருவரையும் கட்டாயப்படுத்தினர். அவ்வண்ணம் செய்யாவிடில் தாம் விவாகத்தை நிறுத்திவிடுவதாகவும் பயமுறுத்தினர். கோபாவேசத்துடன் அதட்டிக் கடுமொழிகள் கூறினர். பாவப் பேதைப்பெண்கள் என் செய்வர்! மிக்க மானமும் நாணமும் உடையராய் மெதுவாகவே சொல்லி முடித்தனர். அப்புறம் எஞ்சிய ஜெபங்களையும் வாயுவேகம் மனோவேகமாய் உச்சரித்துக் கடனைக்கழித்தனர். பிரசங்கஞ் செய்யவேண்டிய சந்தர்ப்பத்தில் பாதிரியார் படாடோபம் முன்னிலு மதிகமாகவே யிருந்தது. "புருஷன் மனைவியை நேசிக்கவேண்டும்; மனைவி புருஷனுக்குக் கீழ்ப்படியவேண்டும்" என்ற இந்த ஒரேவரியில் இரத்தினச் சுருக்கமாய் அதனை எளிதாகவும் இனிதாகவும் சிரமமின்றியும் முடித்துவிட்டனர். அதன் பின் ஆசீர்வாதம் கூறுவது அதனிலும் பதின்மடங்கு வேகமாய் நடைபெற்றது. தம்பதிகள் அனைவரும் ஊர்வலம் வந்து மண வீட்டிற் புகுந்தனர். அவருள் ஒரு திறத்தார் பாதிரியாரை மணவீட்டிற் கழைத்து அங்கு ஆசி கூறும்படி கேட்டுக்கொண்டனர். அவரும் வேண்டா வெறுப்புடன் வந்து சேர்ந்தனர். வந்தவர் அங்கும் மகா தீவிரமாய் வேலையை முடித்துக் கொண்டு மூடிவிட்டனர். இவ்வாராதனையில் இவர் தம் செய்கையைப் பார்த்த எவருக்கும்,

"கையொன்று செய்ய விழியொன்று
[நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய் யொன்று வஞ்சக நாவொன்று
[பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சார செவியொன்று
[கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசைஎவ் வாறு கொள்
[வாய்வினை தீர்த்தவனே

என்றபாடல் ஞாபகத்துக்கு வராமல் போகாது.

அன்றியும் இவ்வாறு படாடோபமாய் ஜெபம் உச்சரிக்கிறதும் வேதம் படிக்கிறதும் ஆராதனை நடத்துகிறதுமாகிய செய்கைகளைச் செய்து வருகிற பாதிரிமார்களைக் காணுந்தோறும் ஒரு கால் சுடுகஞ்சியை நாய் விழுங்கிய செய்கையானது எனது நினைவிற்கு வந்து நகைப்பை விளைக்கின்றது. மேலும் தமது சக்திக்குத் தக்கவாறு இந்த நாளில் இத்தனை விவாகச் சடங்குகள்தான் நிறைவேற்ற வேண்டுமென்று வரையறுத்துக் கொள்ளாமல் கணக்கற்ற வேலைகளை இழுத்து வைத்துக்கொண்டு கடனைக் கழிக்கும் பாதிரிமார் செய்கையானது பக்திக்குரியதன்று.

இனியேனும் பாதிரிமார் தமது உத்தியோகப் பொறுப்பை இனிதுணர்ந்து தமக்கு எத்தனை கஷ்டங்களிருப்பினும் மலர்ந்த முகத்துடனும் அமர்ந்த மொழியுடனும் தங்கள் கடமைகளைச் செய்ய முன்வருவார்களாக.

**ஆ. மதனபாண்டிய நாடார்,**
சிவஞானபுரம்.
பாவூர்சத்திரம் (போஸ்ட்)

---

# தமாஷ்பேச்சு.

வண்டிக்காரன்—ஊர்வந்து விட்டது. கீழிறங்கும். வாடகையைத்தாரும்.

சவ்வாரியாள்—பணமில்லை ஐயா! ஆகையால் என்னைப் பழையபடியும் புறப்பட்ட ஊரில் கொண்டுபோய் விட்டுவிடும்.

---

நமசிவாயர்—சிவானந்தரே! என் மகனுக்கு உமது மகளை விவாகஞ்செய்யச் சம்மதித்துவிட்டது சந்தோஷம். ஸ்திரீதனம் எவ்வளவு தருவீர்?

சிவா—திருப்திகாமாய்த் தருகிறேன். தாங்கள் பெண்ணுக்கு அறுப்புக்கூலியெவ்வளவு தருவீர்?

---

செட்டியார்—ஆசாரியாரே! இந்தாரும் 10-பவுன். திருமாங்கல்யம் செய்யவேண்டும். கூலியென்ன?

ஆசாரி—கொடுத்ததைக் கொடுங்கள்.

செ—கொடுத்தபவுன் பத்துமா?

---

வழிப்போக்கன்—ஐயா புண்ணுக்கு வியாபாரியே! ஏன் உமது தேகமெல்லாம் ரணமாயிருக்கிறது?

புண்—அதோ அந்தத்தெருவில் புண்ணுக்கு புண்ணுக்கு என்று கூறிவரும்போது நாலைந்து காவாலிகள் இப்படிப் புண்ணுக்கிவிட்டார்கள்.

---

# கவிராஜர் காலஞ்சென்றார்.

பெருநாழிக்கு மேற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள முத்துச் செல்லையாபுரம் கிராமவாசியும், முத்தமிழறிந்த மூதறிவாளரும், வசன காவியங்களில் வல்லுனருமான கவிராஜ மு. வீ. சங்கமுத்துப்பிள்ளையவர்கள் 13-10-27ல் வியாழக்கிழமையன்று தமது 51-வது வயதில் தேகவியோக மானார்கள். பொதுஜனபிமானமும் சமத்துவ குணமும் நிரம்பப்பெற்ற இப்பெரியாரின் பிரிவிற்கு நாம் மிகவும் வருந்துவதுடன் இன்னார் நற்கதியடையும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம் என்று பெருநாழி ஸ்ரீமான் ய. முருகேசபாண்டியர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# தற்காலஇந்தியா.

[ சுவாமி விவேகானந்தர் அருளியது. ]

(முன் தொடர்ச்சி.)

மிகவும் புராதன காலங்களிலிருந்து இந்தியாவினுடைய பெருத்த ஐஸ்வரியத்தினுடையவும், கொழுத்த களஞ்சியங்களினுடையவும் கீர்த்தியானது அநேக சக்திகள்வாய்ந்த அந்நிய ஜனசமுகங்களிடத்திலே அதை ஜெயிக்கவேண்டுமென்ற ஆசையைக் கிளப்பி விட்டது. உண்மையில் அது மறுபடியும் மறுபடியும் அந்நிய சமுகங்களாலே ஜெயிக்கப்பட்டு வந்தது. அப்படியானால் இந்தியாவை இங்கிலாந்து கைக்கொண்டது இந்திய மனத்துக்கு ஏதோ புதிதும் நூதனமுமானது என்று ஏன் நாம் கூறவேண்டும்?

பண்டையக்காலந் தொட்டு இந்தியாவானது ஞான பலம், மதசம்பந்தமான அறிவு, ஏரானமான வித்தை, கடைசியாக வேறுவழி யில்லாது போகுமாயின், கோபத்தோடு கூடிய சாபமாகிய ஆயுதம் இவற்றை ஆயுதமாகக் கொண்ட தபசியான வீடற்ற வைதீகன் கோபத்தினால் முகத்தினைச் சுளிக்கும்போது மிக மிகக் கர்வம் படைத்த ராஜ சக்தியும் நடுங்கி நிற்கப் பார்த்திருக்கிறது, சிங்கத்தின் முன்னே ஆட்டுக்கூட்டங்கள் செல்வது போல குடிஜனங்கள் பயங்கரமான ஆயுதங்களுடனும், சைன்யங்களுடனும் கூடிய சர்வசக்திவாய்ந்த அரசர்களைப் பின்பற்றிச் சென்று அவர்களுடைய உத்தரவுக்கு மறுவார்த்தை பேசாமல் மௌனமாய்க் கீழ்ப்படிந்து நடக்க அது கண்டிருக்கிறது. தனவந்தர்களாயிருந்த போதிலும் அரசனை மாத்திரமல்ல ராஜ குடும்பத்தைச்சேர்ந்த எவரைக்கண்டாலும் பயந்து நடுங்கி, முழங்கால் மண்டியிட்டு மிக இழிந்த மாதிரியில் இருந்து சலாம் செய்யப் பழகியிருக்கும் வைசிய ஜாதியாரையுடைய ஒரு தேசத்தின் காட்சி அந்தத் தேசத்திலிருந்து ஒருகையளவு வைசியர்கள் தங்கள் சொந்தக் கடல்களையும், சமுத்திரங்களையும் கடந்து வெகு தூரத்திலேயுள்ள ஒரு ஒரு அந்நிய நாட்டிலே வியாபாரம் செய்வதற்காக வந்து தங்களுடைய கூர்மையான புத்தியினாலும், செல்வத்தினாலுமே அதன் புராதனமான ஸ்திரமாக ஸ்தாபிதம் பெற்றுள்ளது. இந்து முகம்மதிய ராஜ வம்மிசத்தவர்களை தங்கள் பக்கத்தில் வசப்படுத்திக் கொண்டு கடைசியில் அவர்களையும் ஏமாற்றி, அவர்களை பொம்மைபோலாட்டி வைப்பார்கள். அது மாத்திரமல்ல; தங்களுடைய சொந்தத் திரவியம் விருத்தியாகும்படி உதவி புரியும் சக்திவாய்ந்த உபாயங்களாக அவர்கள் அதைச் சொந்தமாக ஆளும் அரசர்களுடைய ஊழியங்களை விலைக்கு வாங்க அதனுடைய ஆயுதங்களையும் வீரத்தையும் ஞானத்தையுமே உபயோகப்படுத்திக் கொள்வார்கள். அந்த தேசத்திலே கர்வம் மிகுந்த ஒரு பிரபுவைப் பார்த்து ஒரு சாதாரண மனிதன் எதிர்த்துப் பேசியதற்காக அவனை எச்சரிப்பது போல "குப்பைமேடே. வெளியேபோ. ஒரு பிரபுவை நீ எதிர்க்கத்துணிகின்றாயா?" என்று சொன்னதாக அந்தத் தேசத்து மிகப்பெரிய கவியின் எழுதுகோலினால் வர்ணிக்கப் பெற்றிருக்கிறது. அந்தத் தேசத்து சக்திவந்தர்களான பிரபுக்களின் சந்ததியார் சீக்கிரத்திலே கிழக்கிந்திய சங்கத்தாரெனப்பட்ட வியாபாரக் கூட்டத்தாரின் உத்தியோகங்களில் இந்தியாவுக்கு வந்து வேலைக்காரர்களாக நியமிக்கப்படுவதை மனுஷிய ஆசையின் பூர்த்தியாம் ஏணியின் உச்சஸ்தானமாகக் கருதுவார்கள். உண்மையில் அத்தகைய காட்சி இதற்கு முன் அதனால் காணப்படாத ஒரு நூதனமே.

மனிதனிடத்திலே சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களும் அதிகமாகவோ' குறைவாகவோ இருப்பதுபற்றி பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு ஜாதியார் எங்கும் எல்லாக் காலங்களிலும் எல்லா நாகரீகமுள்ள சமுதாயங்களிலும் இருக்கின்றார்கள். வன்மையுடைய காலசக்தியினாலே அவர்களின் தொகையும் செல்வாக்கும் வெவ்வேறு தேசங்கள் விஷயத்தில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறாயிருக்கின்றன. சில தேசங்களில் இந்த ஜாதிகளில் ஒன்றினுடைய ஜனத்தொகை அல்லது செல்வாக்கு இன்னொன்றைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கலாம். சில காலத்தில் இந்த ஜாதிகளில் ஒன்று மற்றவற்றைப் பார்க்கிலும் அதிக சக்தி வாய்ந்ததாயிருக்கலாம். ஆனால் உலக சரித்திரத்தைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தால் பிரகிருதியின் நியதிக்கேற்ப பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு ஜாதிகளும் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒன்றன்பின்னொன்றாக உலகத்தை ஆண்டு வருகின்றன வென்பது தெரியவருகிறது.

சீனர்கள் சுமேரியர்கள் மாபிலோனியர்கள், சால்டியர்கள், ஆரியர்கள், ஐரேனியர்கள், அராபியர்கள், இவர்களுக்குள்ளே இந்தப் புராதன சமுகங்களெல்லாவற்றிலும் அவர்களுடைய சரித்திரத்தின் முதற்காலத்தின் சமுதாயத்தை நடத்திச் செல்லும் பரம சக்தி பிராமணன் அல்லது வைதீகனுடைய கைகளிலே இருந்திருக்கிறது. இரண்டாவது காலத்தில் ஆளும் அரசன் க்ஷத்திரியன் சர்வாதிகாரியாய் பரம்பரை ராஜாங்கம் அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சிலரால் பஞ்சாயத்து ஆட்சி இங்கிலாந்தை தலைமையாகக் கொண்டுள்ள தற்காலத்திய மேனாட்டு ஜன சமுகங்களுக்குள்ளே சமுதாயத்தை அடக்கி ஆள்கின்ற இந்தச் சக்தி வியாபாரத்தினால் தனவந்தர்களான வைசியர்களுடைய கைகளிலே முதன் முதலாவதாக வந்திருக்கிறது.

பூர்வீக காலத்துட் ராய் நகரமும் கார்த்தேஜ் நகரமும் சமீபகாலத்தில் வியாபார தேசங்களாயிருந்த வெனிசும் அதுபோன்ற இதர சிறிய தேசங்களும் மிகவும் சக்திவாய்ந்த தாயினும் அவற்றினிடத்தே சரியான பொருளில் கூறத்தகுமாறு வைசிய சக்தியின் உண்மையான எழுச்சியுண்டாகவில்லை.

நியாயமாகச் சொன்னால் இராஜ குடும்பத்தின் சந்ததியாருக்கே அந்தப் பழய நாட்களின் வியாபாரமெல்லாம் சொந்தமாயிருந்தது. அவர்கள் சாதாரண ஜனங்களையும் தங்கள் கீழுள்ள வேலைக்காரர்களையும் வியாபாரம் நடத்துவதற்கு உபயோகித்துக் கொண்டு அதனாலுண்டாகும் லாபங்களைத் தாங்களே அடைந்து வந்தார்கள். இந்த சிலமனிதர்களைத் தவிர வேறெவரும் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள அல்லது தேச ராஜாங்கத்திலும் அது சம்பந்தப்பட்ட எவ்விஷயங்களிலும் கூட தங்கள் அபிப்பிராயத்தை எடுத்துக்கூற விடப்படுவதில்லை. எகிப்து போன்ற மிகப் புராதனமான தேசங்களிலே வைதீக சக்தி கொஞ்ச காலத்துக்கே தன்னந்தனி ஆதிக்கத்தை வகித்திருந்தது. பின்னர் அது ராஜ சக்தியின்கீழ் அடங்கி அதற்கு ஓர் உதவியாக இருந்து வந்தது. சீன தேசத்திலே ராஜ சக்தியானது கன்ப்யூஷியஸ் என்னும் மகானால் மத்திமப் படுத்தப்பட்டு 25 நூற்றாண்டுகளுக்கு மேலாக வைதீக சக்தியை தன்னுடைய எதிர்ப்பற்ற தீர்ப்புக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்து அதை அடக்கி நடத்திக்கொண்டு வருகிறது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக திபேத் தேசத்து சர்வக்ராஹ்ய லாமாக்கள் ராஜகுடும்பத்துக்கு ஞானகுருக்களாயிருந்த பொழுதிலும், சீன சக்கரவர்த்திக்கு எல்லா விதத்திலும் அடங்கி நடந்து தங்கள் நாட்களைக்கழிக்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் ராஜ சக்தியானது இதர பூர்வீக நாகரீக ஜன சமுகங்கள் வைதீக சக்தியை ஜெயித்துத் தனது இணையற்ற அதிகாரத்தைப் பறையறைவித்து நெடுங்காலத்துக்குப் பின்னரே அப்படிச் செய்ய முடிந்தது. ஆகையால் இந்திய சக்ராதிபத்தியத்தின் அமைப்பு சீனம், எகிப்து பாபிலோன் ஆகியவையும் இன்னும் இதர சக்ராதிபத்தியங்களும் எழுந்து நெடு நாட்களுக்குப் பின்னர் ஏற்பட்டது. யூத ஜனங்களிடத்திலேதான் ராஜ சக்தி வைதீக சக்தியின் மீது ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்குக் கடும் பாடுபட்ட பொழுதிலும் அந்த முயற்சியில் முழுத் தோல்வி யடையும்படி வந்தது. யூதனிடத்திலே வைசியர்கள் கூட ராஜ சக்தியை அடையவில்லை. ஆனால் சாதாரண குடிஜனங்கள் வைதீகக் கொடுமையாம் விலங்குகளினின்றும் தங்களை விடுவித்துக் கொள்ள முயன்ற பொழுது உள்ளுக்குள்ளேயே உண்டான கிறிஸ்தவமதம் போன்ற விரோதமான மதஇயக்கக் குழப்பத்திலும் வெளியே இருந்து நெருங்கிய ரோம சக்ராதிபத்தியத்தினாலும் சாகும்படி நசுக்கப்பட்டு விட்டார்கள்.

முற்காலங்களிலே வைதீக சக்தி நெடுநாட்கள் போராடிய போதிலும் அதனிலும் அதிக சக்திவாய்ந்த ராஜ சக்தியால் அடக்கப்பட்டது போல இக்காலத்திலே புதிதாகக் கிளம்பிய வைசிய சக்தியின் கடூரமான அடியினால் அநேக ராஜகிரீடங்கள் மண்ணிலே உருண்டு விட்டன. அநேக செங்கோல்கள் துண்டு துண்டாக்கப் பட்டன. நாகரீக தேசங்கள்சிலவற்றில் கொஞ்சம் அதிகாரத்துடன் தங்கள் ராஜடாம்பீகத்தையும் பெருமையையும் காண்பித்துக் கொண்டிருக்கும்படி விடப்பட்டிருக்கிற சில சிம்மா சனங்களுக்கும் இந்த வைசிய ஜாதியாருடைய உப்பு, எண்ணெய்,சர்க்கரை, சாராயம் இவற்றை வியாபாரம் செய்கிறவர்களுடைய பிரமாண்டமான ஐஸ்வர்யத்தினால் ரட்சிக்கப் பட்டு ஓர் அலங்காரமான அழகிய முன்னணியாகவும் பின்னேயிருந்து கொண்டு உண்மையில் அரசாட்சி செய்யும் கூட்டத்தாராகிய வைசியர்களுடைய பிரதாபத்தை வெளிப்படுத்துவதாகவும் வைக்கப்பட்டிருக்கிறது.

அந்த மகத்தான புதிதாகக் கிளம்பிய வைசிய சக்தி இதன் ஆக்ஞையினால் ஒரு துருவத்திலிருந்து இன்னொரு துருவத்திற்கு ஒரு நிமிஷத்தில் மின்சார மரனது செய்திகளைக் கொண்டு போகின்றது. அதன் பெரிய ரஸ்தாவானது மலையுயரம் கிளம்பும் அலைகளையுடைய சமுத்திரமாயிருக்கின்றது. அதன் சொற்படி பூமண்டலத்தின் ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்துக்கு மிகச் சுலபமாகச் சாமான்கள் கொண்டுபோகப் படுகின்றன. அதன் ஆக்ஞையிலே பெரிய பெரிய அரசர்களும் நடுங்குகின்றார்கள்.

அந்தப் பிரமாண்டமான அலையின் வெள்ளையான நுரையின் மேற்பரப்பிலே சர்வசித்தாகிய வைசிய சக்தியானது அதன் பலவிதப் பெருமையிலும் இங்கிலாந்து தேசத்தின் கம்பீர சிங்காசனமாக அமைந்திருக்கிறது.

ஆகையால் இந்தியாவை இங்கிலாந்து ஜெயித்ததானது நாம் நம்பும்படி அடிக்கடி கேட்கப் படுவது போல இயேசுவினால் அல்லது பைபிள் புத்தகத்தினால்ஆகிய ஜெயமன்று. அதுபோல லாயர்களும் பட்டாணியர்களும் இந்தியாவை ஜெயித்தது போன்றுமல்ல. ஆனால் ஏசுவின் நாமம், பைபிள் புத்தகம், ஆடம்பரமான ஆரண்மனைகள், பூமியையே அசைத்துக் கொண்டு நடக்கின்ற ரதகஜ துரகபதாதிகளாலாய சைந்யங்களின் பலமான காலடியோசை, யுத்தபேரிகைகள், கொம்புகள் நகாரக்கள் முதலிய வற்றின் சப்தங்கள் ராஜசிங்காசனத்தின் சிறந்த காட்சி. இவற்றுக்குப் பின்னே இங்கிலாந்தினுடைய உண்மையான சாந்நித்தியம் எப்பொழுது மிருக்கிறது. அந்த இங்கிலாந்தினுடைய கொடி தொழிற்சாலையின் புகைப்போக்கியாம். படைகள் வியாபாரிகளாம். புத்தகங்கள் உலகத்து வியாபார ஸ்தலங்களாம். சக்கிரவர்த்தினி அதிஷ்ட தேவதையாம். அது இது வரையில் ஒரு பொழுதும் பார்த்திராத நூதனமா மென்று இந்தியாவை இங்கிலாந்து இப்படி ஜெயித்தது நூதனமாமென்று இதனாலேதான் நான் முன்பு அப்படிக்கூறினேன். இந்தப் புதிய ராஜ சக்தியுடன் இந்தியா இடப்படர் தொங்கி யிருப்பதினால் இந்தியாவில் எந்த மாதிரி புதிய புரட்சியுண்டாகுமென்பதும் அந்தப் புரட்சியின் பலனாக என்ன புதிய மாறுதல் பிற்கால இந்தியாவுக்கு ஏற்படப்போகிற தென்பதும் அதன் பூர்வ சரித்திரத்திலிருந்து ஊகிக்கப் படமுடியாது.

பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர நான்கு ஜாதிகளும் ஒன்றன்பின்னொன்றாக உலகத்தை ஆள்கின்றன வென்று முன்னர் கூறியுள்ளேன். இந்த ஜாதிகளில் ஒவ்வொன்றும் பரம அதிகாரம் செலுத்திய காலங்களிலே ஜனங்களின் நன்மைக்கான சில காரியங்கள் செய்யப்பட்டன. ஆனால் மற்றக் காரியங்கள் அவர்களுக்கு தீங்கு உண்டுபண்ணுவனவாயிருந்தன.

வைதீக சக்தியின் அஸ்திவாரம் புத்திப்பலத்தை ஆதாரமாகவும் வைத்து ஆயுதங்களை உதவியாகக் கொண்ட ஸ்தூலபலத்தை ஆதாரமாகக் கொண்டதல்ல ஆகையால் வைதீக சக்தியின் ஆதிக்க காலத்திலே புத்தி விற்பத்தியும் பாஷாஞானமும் அதிகமாகயிருந்தன. ஒவ்வொருமனுஷ்ய ஹிருதயமும் ஐம்புலன் அறிவுக்கு அதீதமான ஆத்மிகவுலகத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் அதிலிருந்து உதவி பெறவும் எப்பொழுதும் ஆவலுள்ளதாயிருக்கிறது. அந்த உலகத்துக்குள் நுழைவது பொதுவாக மனுஷ்ய ஜாதியாருக்கு சாத்தியமில்லை. தங்கள் புலன் இந்திரியங்களைப் பரிபூரணமாக அடக்கக் கூடியவர்களும் சத்து வருணசாரம் அதிகமாகவுள்ள லக்ஷணத்தையுடையவர்களுமாகிய ஒரு சில மகாத்மாக்களே ஜடத்தினுடைய பயங்கரமான அணிவகுப்பைப் பிளந்து சென்று நேருக்கு நேர் ஐம்புலன்கட்கதீதமானவஸ்துவைச்சந்திக்கிறார்கள், அந்த ராஜ்யத்தின் வேலைப்பாடுகளை ஆதரிக்கின்ற அவர்களே அதிலிருந்து செய்திகள் கொண்டுவந்து கொடுத்தும் மற்றவர்களுக்கு மார்க்கத்தைக் காண்பிக்கவும் செய்கிறார்கள். இந்தமகாத்மாக்களே மனுஷ்ய சமுதாயங்களுக்குக் குருக்களாவார்; ஆதிவழிகாட்டிகளாவார்; தலைவர்களாவார்; இவற்றை நடத்துபவர்களாவார்.

---

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

லேயோ பிணக்குகளிருந்தாலும் ஒரு நன்மையின் பொருட்டு அவர்கள் ஒத்துப்போவதைப் பார்த்திருக்கிறோமல்லவா? நமக்குள் ஒருவருக்கொருவர் வேண்டிய மன மாச்சரியங்களிருக்கலாம். பொதுவாக ஜாதி விஷயமாக ஆலோசிக்கவோ, வேலை செய்யவோ நேர்ந்த காலத்தில் சொந்தமான மாச்சரியங்களை வீட்டிற்குள் ஒரு பக்கமாக வைத்துவிட்டு நம் ஜாதிக்குரிய வேலைகளை முதன்மையாகச் செய்து முடிக்க வேண்டு மென்று உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

எந்த அசட்டு வைதீகக் கொடுமை தேசத்திற்குக் கெடுதி யென்றும், எந்த அசட்டு வைதீகர்கள் தேசத்திற்குத் தீங்கிழைக்கிறார்களென்றும் அதை அழிப்பதிலும், அவர்களை ஒழிப்பதிலும், எவ்வெக்காலங்களில் எந்தெந்தப் பெரியார்கள் முன் வந்தாலும் அவர்களுக்கு உங்களன்பான தொண்டும் அதிகமான ஊக்கமும் உதவுமாறு செய்ய ஒருபோதும் பின் வாங்கக் கூடாதென்று உறுதி செய்து கொள்ளும்படி வற்புறுத்திக் கூறுகிறோம். மரணத்துக்கு முன்னும் பின்னும் நம்மைக் காப்பாற்றுவது சத்தியமே. சத்தியத்தை நாம் காப்பாற்ற வேண்டும். அதுவும் நம்மைக் காக்கும். ஆகையால் நாம் எந்த வேலையிலும் சத்தியத்தையும், தைரியத்தையும் முன்னிருத்தி வேலை செய்து வெற்றி பெற்று திருப்தி யடைவோமாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

மானிடர்களே! உங்களுக்குள் ஒற்றுமை ஓங்கி வளர வேண்டும். இன்றேல் ஒருவரை யொருவர் அறியீர்; கருதிய கருமம் ஆற்றவல்லவ ரல்லீர்; விரோத வெக்கை தகிக்கும்; பகைமை ஒலி செவி பிளக்கும்; ஜென்ம வித்தியாசங் காணும். எனவே உறுதி கொள்வீர்! ஒற்றுமை கொள்வீர்!!

"அசரீரி"

Tamil Heritage Foundation International Digital Library EBook collection